# தமிழ்ப் பொழில்

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௬ குரோதி, மாசி. 1965 பிப்ரவரி | மலர் |
| --- | --- | --- |
| ௪௰ | | ௰௧. |


# இந்தி—தமிழ்—தமிழ்நாடு

ச. சுயம்பிரகாசம், பி.ஏ., பி.எல்.,

தமிழ் நாட்டில் சில நாட்களாக நடக்கும் கிளர்ச்சி இந்த நாட்டிலுள்ள மக்களின் கவனத்தை ஈர்த்ததுமட்டுமின்றி உலக மக்களுடைய உள்ளத்தைத் தொட்டு ஆச்சரியத்தையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. 1965 சனவரி 26 இந்திய நாட்டின் குடியரசு நாள். அந்நாள் இந்நாட்டு மக்களின் புனிதநாள்; சாதி, மதம், அரசியல் கட்சிவேறுபாடு கருதாது யாவரும் கொண்டாட வேண்டிய நாள். அந்நாளை அப்படி ஆக்கித்தருவது ஆளுங்கட்சியினரது பொறுப்புவாய்ந்த கடமை. அதில் தவறிவிட்டது நமது அரசு.

இந்தி இந்த நாட்டின் பொதுமொழியாக இருக்கவேண்டும் என்பது இந்திய அரசியல் சட்டத்தின் அமைப்பு என்றாலும் அப்படி சட்டமாகச் செய்யவேண்டுமென்று பேசப்பட்ட காலத்திலிருந்தே இந்தியைத் தாய்மொழியாகக்கொள்ளாத நாட்டுமக்கள் அரசியல் கட்சி வேறுபாடின்றித் தங்கள் வெறுப்பைக்காட்டி வந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் முன்னர் ஆளுங்கட்சியினர் இந்தியைக் கட்டாய பாடமாக வைத்தகாலத்து எதிர்த்து சிறைசென்று அவதிப்பட்ட மக்கள் எண்ணற்றவர். அக்காலத்து ஆளுங்கட்சியில் முதல் அமைச்சராக இருந்த திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் மக்கள் உள்ளத்தை நன்கு தெரிந்து அப்படிக் கட்டாய பாடமாக்குவது கூடாது என்று இன்று கூறுகிறார்கள். அன்றுதொட்டு இன்றுவரை இந்தி கட்டாய பாடமாக்குவதை தமிழ் நாட்டு மக்கள் விரும்பவில்லை என்பதும் ஆட்சியாளருக்கு நன்குதெரியும், அண்மையில் நடந்த அரசியல் சட்டம் மாற்றத்திலிருந்தும் இது உணரக்கிடக்கின்றது. அதுமட்டுமின்றி அரசியல் சட்டத்தை வகுத்த காலத்திலேயே இந்தி மொழியை இந்திய மொழியாக்க பலத்த எதிர்ப்புக்கிடையே வாக்கெடுப்பில் ஒரு வாக்கு அதிகம் பெற்றே அது சட்டமாக்கப்

பெற்றது எனும் உண்மையை அறியும்போது இந்நாட்டு மக்களில் பெரும்பகுதியினர் அன்றிருந்தே விரும்பவில்லை என்பது வெளிப் படை. அரசியல் சட்டத்தின்படி பதினன்கு மொழிகள் தேசிய மொழி கள் என்று ஒப்புக்கொண்ட பிறகு இந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டுமென்றதற்குக் காரணம் அதனுடைய இலக்கண இலக்கிய மேன்மைக்கோ, மொழிச் சிறப்பிற்கோ அல்ல என்பதை இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களே கூறுகின்றனர்கள். ஆனல் நாட்டில் ஆட்சிமொழியாக்க வேண்டுமென்பதற்கு கூறப்பட்ட கூறப் படும் காரணம் இந்நாட்டிலுள்ள பெரும்பாலான மக்களால் பேசப் படும் மொழி என்பதுதான். இதன் உட்பொருள் நாட்டு மக்களில் பெரும்பாலோரால் பேசப்படும்மொழி என்று பொருள்அல்ல நாட்டு மொழிகளாகிய பதினன்கு மொழிகளிலே பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழி இந்தி என்பதுதான் பொருள்.

இதனையும் உட்புகுந்து ஆராய்ந்தால் உண்மையல்ல என்பது வெளிப்படுகின்றது. இந்தி பேசப்படும் நாடுகள் என்பன முக்கிய மாக நான்கு. அவை பீகார், ராஜஸ்தான், மத்தியபிரதேசம், உத்தர பிரதேசம் ஆகும். இவைகளில் ஓரிடத்தில் பேசப்படும் இந்தி மற்றெரு இடத்திலுள்ளவருக்குப் புரிவதில்லை. காரணம் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு விதமாகப் பேசப்படுவதால்தான். இதனை, இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவரும் தமிழ் நாட்டில் கவர்னராக இருந் தவருமாகிய திரு. ஸ்ரீபிரகாசா அவர்கள் கூறுகிறார்கள். "Hindi is spoken in different ways by different persons and it is not always easy to uuderstand the speech of a person from one part of the so-called Hindi speeaking world by a person of another part of the same world. Hindi has hundurds of dialects" (Mail dated 1—2—65) இதிலிருந்து பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழி இந்தி என்பதும் பொய்யாகிறது.

எனினும் இந்தி ஆட்சி மொழி என்று அரசியல் சட்டத்தில் பதினேழாவது பிரிவில் சட்டமாகிவிட்டது. சட்டமான ஆண்டி லிருந்து 15 ஆண்டு வரை ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழி யாக இருந்துவரும் என்று குறிப்பிடப்பட்டது. 15 ஆண்டுகள் ஆகியும், நாட்டு மொழியாவதற்கு தகுதியும், திறமையும் பெருத காரணத்தாலும், இந்தி பேசாத நாட்டிலே மக்கள் அம்மொழியை விரும்பும் அளவிற்கு ஏற்காத காரணத்தாலும் எதிர்ப்பைக்காட்டிய தால் சமீபத்தில் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றவேண்டியதாயிற்று.

இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட மக்கள் அரசியல் சட்டத்தில் இந்தி ஆட்சிமொழி என்று புகுத்தப்பட்டதை ஆதாரமாக வைத்து உடனடியாக அதனை ஆட்சிமொழியாக வைப்பதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று வற்புறுத்தல் ஏற்பட்டது. இந்தி பேசாத நாட்டுமக்கள் அப்படிச்செய்வது அம்மொழியை தங்கள்மீது பலவந்தமாக சுமத்துவதாகும் என்று கருதினார்கள், ஆகவே இருபகுதியினரையும் சமாதானம் செய்யவேண்டிய பொறுப்பு அரசாங்கத் தலைவர்கட்கு ஏற்பட்டாலும், நாட்டுப் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்கள் இந்தி பேசப்படும் நாட்டிலிருந்து வந்தவர் ஆன காரணத்தால் சட்டத்தால் இந்திய நாட்டினருக்கு நன்மையை ஏற்படுத்தி, வாயளவிலே உறுதிமொழி கொடுக்கிறேன் என்று விளக்கினார்.

அதாவது சட்டத்திலே 15 ஆண்டுகட்குப் பிறகும் ஆங்கிலமே தொடர்ந்து ஆட்சிமொழியாகும் என்ற இடத்திலே ஆங்கில வார்த்தை "May" "மே" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்குப் பொருள் "இருக்கலாம்" என்பது இந்த வார்த்தைக்குப் பதிலாக "Shall" இருக்கவேண்டுமென்று திருத்தம் கொடுக்கப்பட்டது. இந்த வார்த்தைக்குப் பொருள் "இருக்கவேண்டும்" என்பது இதனை இந்தி பேசும் நாட்டுப் பிரதிநிதிகள் எதிர்த்தார்கள். அவர்களை நேரு ஆதரித்து "மே" என்ற வார்த்தை இருந்தாலும் இந்தி பேசாத மக்களிடையே இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது. நான் உறுதிமொழி கொடுக்கிறேன் என்று சொல்லிப்போனார்.

தற்போது எழுத்து மூலமாக சட்ட அமைப்பிலே ஆங்கிலம் தொடர்ந்து இருக்கலாம் என்ற உரைப்பாட்டிற்கும் நேரு அவர்கள் வாக்குறுதி என்று அளித்த உறுதிப்பாட்டிற்கும் முரண்பாடு ஏற்படுவதுதான் அண்மையில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட கிளர்ச்சிக்குக் காரணம். ஆங்கிலேய நாட்டிலே வழக்கத்தை அனுசரித்தே அரசு நடத்தப்படுகிறது. அங்கு அரசியல் சட்டம் எழுதப்படவில்லை. ஆனால் நம் நாட்டில் சட்டம் எழுதப்பட்ட காரணத்தால் சட்டத்தில் எழுதப்பட்டதில் கூறப்படும் முறைப்படி நடப்பது என்பதுதான் நீதி மன்றங்களின் தீர்ப்பாகும் என்பதை அறிஞர்கள் ஒப்புக்கொள்வார்கள். இதனை அனுசரித்து சட்டத்தை நடைமுறையில் செயல்படுத்தும் அமைப்பாளர்கள் இந்தியிலேயே பல வெளியீடுகள் செய்ய இந்தி பேசாத நாட்டில் சிரமம் ஏற்பட்டது வெளிப்படை. இம்முறை அரசாங்கத்தில் பணிசெய்பவர்கள் மட்டுமன்றி தொழிலில் ஈடுபட்ட மக்களையும் பாதிப்பதாயிற்று. இதனை நன்கு விளக்கி

திரு. K. சந்தானம் அவர்களும், திரு. டாக்டர் C. P. ராமசாமி ஐயர் அறிக்கை சட்டத்தில் நேரு கொடுத்த உறுதிமொழியை வற்புறுத்தின்லன்றியிலும் இந்தி பேசாத நாட்டுமக்களை சமாதானப்படுத்த இடமில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் மாணவர்கள் எடுத்துக்கொண்ட பங்கும் கிளர்ச்சியும் மிக மிக போற்றுதற்குரியது. உயிரையே தியாகம் செய்கின்ற அளவிற்கு மாணவர்கள் சென்றிருக்கிறார்கள். தன்னைத் தானே தீயிலிட்டு உயிரை மாய்த்துக்கொள்ளும் செயலை நாம் விரும்பவில்லை, நேரில் போரிட்டு வேண்டுவதைப் பெறவேண்டும் என்பதுதான் தமிழ் நாட்டின் பண்பு. எனினும் மாணவர்கள் செய்கையிலிருந்து அவர்கள் உணர்ச்சி எத்துணை ஆழ்ந்திருக்கின்றது என்பதையும், பட்டினிகிடத்தல், சத்தியாக்கிரகம் செய்தல், சிறை புகுதல் முதலிய தியாகங்களைவிட சிறந்த தியாகத்திற்குத் தங்களைப் பண்படுத்தி இருக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது தமிழர்கள் நெஞ்சு உணர்வு உச்சத்தில் இருக்கும் என்பதில் ஐயமில்லை. மாணவர்கள் மிகுந்த பாராட்டுதலுக்கு உரியவர்கள். அப்படிச் செய்தும் ஆட்சியாளர் உடனடியாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்பதற்கு சட்டபூர்வமாக உறுதி செய்யப்படும் என்று அறிக்கை வெளியிடாதது மிகமிக வருந்தத்தக்கது. இனியும தமிழ் நாட்டு மாணவர்களையும் மக்களையும் இப்படிப்பட்ட சோதனைக்கு ஆளாக்காமல் உடனடியாக சட்டமியற்ற ஆவனசெய்ய அரசியாலரைக் கேட்டுக்கொள்ளுகிறோம். தமிழ் நாட்டு மக்கள் மன்ற உறுப்பினர்கள் ஆளும்கட்சியினர்கள் தமிழ் நாட்டு மன்ற உறுப்பினர்கள் தக்கமுறையில் இறங்கி வேலைசெய்ய வேண்டுகிறோம். ஏனைய பகுதியிலுள்ள இந்தி பேசாத நாட்டுமக்களும், மன்ற உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண்டுகிறோம். இந்தியைத் தாய் மொழியாகக்கொண்ட பகுதியில் உள்ள மக்களும், மன்ற உறுப்பினர்களும் நாட்டு ஒருமைப்பாட்டை மனதிலிறுத்தி முன்வந்து சட்டமாக்கும் பணியில் ஈடுபட வேண்டுகிறோம்.

தமிழன்பர்கள் நன்கு சிந்தித்து தமிழ் வளர்ச்சி, தமிழர் முன்னேற்றங்கருதி தமிழ் நாட்டிலேயே பேசியும் செயல்பட்டும் வருவதோடு மற்றப் பகுதிகளில் தமிழைப் பரப்பவும், தமிழர் வாழ்வுக்கு வழிதேடவும் ஆவன செய்தல் மிக அவசியம் என்பதைக்கருதி, தக்க பொருள் திரட்டி அப்பணியில் இறங்கவேண்டுவது மிகமிக அவசியமும், அவசரமும் ஆகும் என்று வேண்டுகிறோம்.

வணக்கம். தமிழ் வாழ்க !

ஆராய்ச்சி அரங்கம்:

# வள்ளுவ அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகள்

புதுதில்லி, டிச. 22;

*தில்லியில் "தமிழ் ஆராய்ச்சி அரங்கம்" என்னும் அமைப்பு அண்மையில் ஏற்பட்டிருப்பதும், தில்லித் தமிழ்ச்சங்கம் ஆழ்ந்த இலக்கிய ஆராய்ச்சிக்காக இந்த அமைப்பை உருவாக்கியிருப்பதும் அன்பர்கள் அறிந்ததே. இவ் அரங்கத்தின் முதல் ஆராய்ச்சிக் கட்டம் 20—12—64 ஞாயிறு மாலை 3-30 மணிக்குத் தமிழ்ச்சங்கக் கட்டிடத்தில் நடைபெற்றது. முந்திய கூட்டத்தில் தீர்மானித்தபடி, தில்லிப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. இராம சண்முகம், "வள்ளுவ அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகள்" என்னும் பொருள்பற்றிய தமது ஆய்வுரையை நிகழ்த்தினார்.*

"வள்ளுவ அரசு பல அம்சங்களில் தற்கால இலட்சிய ஆட்சி இயல் கொள்கைகளோடு ஒத்திருந்தாலும் சில முக்கியமான அடிப்படைக் கோட்பாடுகளில் இவைகளின்றும் வேறுபடுகிறது. மேலை நாட்டு ஆட்சியியல் விற்பன்னர் சிலர், "அண்டை நாட்டைப் பகை நாடாகக் கருதியே திட்டம் வகுத்துள்ளார்கள்; வள்ளுவ அரசோ பகைமையே கூடாது என்ற அடிப்படை நோக்கில் அமைகிறது. தற்காலத்தில் சிறப்பாகப் போற்றப்படும் "அண்டைநாடுகளுடன் நல்லுறவு" என்ற பாங்கில் அமைகிறது வள்ளுவ அரசு. பல "அரச நீதி"கள் அரசனுக்கே முக்கியத்துவம் கொடுத்திருக்க, வள்ளுவம் குடிதழீஇக் கோலோச்ச வேண்டுமென்று விதிக்கிறது. வள்ளுவக்காலம முடியாட்சியின் காலமே என்றாலும் அதில் குடிகளின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது என்பதையே இது காட்டுகிறது. மேலும் அரசபதவி பரம்பரை உரிமை என்ற கருத்து திருக்குறளில் காணப்படவில்லை. தகுதி உள்ளவன் அரசப் பொறுப்பை ஏற்கலாம். என்ற கருத்து அக்காலத்தில் நிலவியிருக்குமோ என்ற எண்ணத்தையே திருக்குறள் எழுப்புகிறது.

திரு. சண்முகம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: "நாடுபற்றி வள்ளுவர் கூறும் கருத்து "தன்னிறைவுள்ள சேமநல சமுதாயம்" என்று பல அரசியல் மேதைகள் கூறும் கருத்தை ஒத்திருக்கிறது. "நாடென்ப நாடா வளத்தன, நாடல்ல நாட வளம்

தரும் நாடு" என்பது வள்ளுவர் கருத்து. "சட்டமும் தண்டனையும் குற்றவாளியைத் திருத்தும் நோக்கினவேயன்றி அழிக்கும் நோக்கின அல்ல" என்ற தற்காலக்கருத்து "கடிது ஓச்சி மெல்ல எறிக" என்னும் வள்ளுவப்பாட்டில் காணக்கிடக்கிறது............... அண்டை நாடுகளுடன் பகைமையை வெறுத்து நட்பை வலியுறுத்தும் வள்ளுவ அரசியல் நோக்கைக் கவனிக்கையில், வள்ளுவச் சிந்தனை சாம்ராச்சியம் என்னும் பேரரசாக அமைக்கும் கொள்கையில் செல்லவில்லை என்றும், தனித்தனிச் சிறிய அரசமைப்புக்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்றும் எண்ணத் தோன்றுகிறது. இது ஒருவகையில், சங்ககாலத்திலும் "அதற்கு முன்பும் தமிழகத்தில் நிலவிய தனிக்குடும்ப அமைப்போடு ஒத்திருக்கிறது."

ஆய்வுரையைத் தொடர்ந்து நடைபெற்ற கருத்தாடலில் திருமதி கனகசவுந்திரி இளந்திரையன், திருவாளர்கள் பார்த்தசாரதி. க. ஆறுமுகம், சாலைஇளந்திரையன் ஆகியோர் கலந்துகொண்டு தத்தம் ஐயங்களையும் கருத்துக்களையும் வெளியிட்டார்கள். வள்ளுவ அரசு தொல்காப்பிய வாகைத்திணைக் கருத்துக்களைத் தழுவி அமைந்ததாகத் தோன்றுகிறது" என்று ஆய்வுரையாளர் குறிப்பிட்டதை விளக்கித் திரு ஆறுமுகம் பேசினார்: "தன்னளவில் தனது கடமையை நிறைவேற்றுவதே ஒருவனுக்கு வெற்றி. மற்றொருவனோடு இவன் சாதனையை ஒப்பிட்டுத்தான் இவன் உயர்வை அறிய வேண்டுமென்பதில்லை. இதுவே வாகைத்திணையின் மூலக் கருத்து."

வள்ளுவ அரசின் அயல்நாட்டுக் கொள்கைப் பற்றி ஆய்வுரையாளர் குறிப்பிட்ட செய்திகளை ஒட்டித் தமது கருத்துக்களை வெளியிட்டார் திரு. சாலை இளந்திரையன்: "வள்ளுவ ஆட்சி இயல், தனித்தனிக் குறுநிலத் தன்னுரிமை நாடுகளாகப் பிரிந்து இயங்கிய அக்காலத் தமிழ்ச் சமுதாயப் போக்கைத் தழுவி அமைந்தது. அண்டை நாட்டை வென்று தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ளும் "சாம்ராச்சிய நோக்கு" அக்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. ஓர் ஊரில் பல குடும்பங்கள் இருப்பதுபோல ஒரே (தமிழ்) நாட்டில் பல குறுநிலங்கள் இருந்தன. அவை ஒன்றுக்கொன்று பகைமையோடு வாழவேண்டிய அவசியமே இருக்கவில்லை. ஆயினும் போர்களும் நிகழாமலில்லை. ஆனால் அவைகளுக்குக் காரணம் போர்ப் புகழ், வீரவேட்கை, சிலப்பதிகாரத்தில் காணப்படுவது போன்ற "வாய்காவாப்" பேச்சுகள் போன்றவைகளே; எந்த ஒரு போருக்கும் மண்ணாசை காரணமாக அமைந்ததாகத் தெரியவில்லை.

"சாம்ராச்சிய ஆசை காரணமாகப் போர் நடப்பது பற்றிய குறிப்பு எதுவும் திருக்குறளில் இல்லை. ஆனால் வள்ளுவ ஆட்சி இயல் படையைப் பற்றியும், படைமாட்சியைப் பற்றியும் விவரிக்கிறது. இந்தப் படை தற்காப்புப் படை என்றே நினைக்கவேண்டியுள்ளது. வள்ளுவர் மனிதனின் நற்போக்கில் நம்பிக்கைவைத்து அறம் கூறினாலும், அற்போக்கு மனிதரும் உலகில் உள்ளனர் என்பதை அவர் மறந்துவிடவில்லை. அதனால் "நல்லவர் ஆட்சியை வல்லவர் தாழ்த்திடும் நச்சு மனப்பான்மை" யும் உள்ள உலகில், பாதுகாப்புக்காகப் படை அவசியம் என்பது வள்ளுவர் கருத்து. வள்ளுவர் காண விழைந்த நல்லவர்கள் அப்பாவிகளல்லர்; நல்லதை வளர்ப்பதோடு அல்லதின் தாக்குதலிலிருந்து அதைப் பாதுகாக்கவும் தெரிந்த நல்லவர்கள் அவர்கள். ஏருழுது பரம்படித்து, நாற்று நட்டு உழைக்கும் உழவன் களை எடுக்கவும் காவல் காக்கவும் தெரியாமல் இருந்தால் பயிர் என்ன ஆகும்? களை எடுப்பதற்கும் காப்பதற்குமே வள்ளுவ அரசியல் போர்ப்படை இருந்தது.

"வள்ளுவ அண்டைநாட்டுக் கொள்கையில் ஒரு பெரிய புதுமை காணப்படுகிறது. இப்போது, உலகில் ஒருநாடு சேமநல அரசை இழந்து தத்தளிக்கும்போது அதைக் கைகொடுத்துக் காக்கவேண்டியது ஐக்கியநாடுகள் சபையின் பொறுப்பு என்ற கருத்து உருவாகியுள்ளது. வள்ளுவப்பழங்காலத்தில் இப்படிப் பொது நிறுவனம் எதுவும் இருக்கவில்லை. ஆகையால் அண்டை நாட்டில் கொடுங்கோல் ஆட்சி நடந்தால், அதன்மேல் படையெடுத்து அந்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி நல்கவேண்டும் என்கிறார் வள்ளுவர். பகைமாட்சி என்னும் அதிகாரத்தில், "ஓம்பா மெலியார் மேல் மேக பகை" என்று வள்ளுவர் கூறுவதன் கருத்து இதுவே. இந்த அதிகாரத்தின் பின் ஒன்பது பாட்டுக்கள் "ஓம்பா மெலியான்" யாவன் என்பதை வலியுறுத்துகின்றன. 'இறைமாட்சி' யுள் காணப்படும் உயர் அரசு இயல்புகளில் ஒன்றுகூட இல்லாத ஒரு கொடுங்கோலனே இந்த ஒன்பது பாட்டுக்களில் சித்தரிக்கப்படுகிறான். அதனால் அவன் மக்களின் அன்பை இழந்த எமலியன்; தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் தகுதி எதுவுமே இல்லாதவன். அவன்மேல் படையெடுத்து அவன் ஆட்சியை ஒழிக்கவேண்டும் என்பது வள்ளுவ அரசியல் கோட்பாடுகளில், ஒன்று.

"அடுத்துவரும் பகைத்திறம் தெரிதல் என்னும் அதிகாரத்தில், இளைதாக முள்மரம் கொல்க, களையுநர் கைகொல்லும் காழ்த்த இடத்து" என்ற பாட்டு வருகிறது. இதில் எடுத்தாளப்படும்

" முள்மரம் " என்ற உவமையும், ஒழிக்கப்படவேண்டியவன் தீயனாக இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது. வளர்ந்து வயிரமேறியபின் எந்த மரத்தையுமே வெட்டுவது சிரமந்தான். ஆனால் அப்படிப் பொதுவாக மரம் என்று சொல்லாமல் "முள்மரம்" என்றே வள்ளுவர் கூறுவதால் அண்டை நாட்டார் தீயவனாக (கொடுங்கோலனாக) இருந்தால்தான் அவன் மேல் படையெடுக்கலாம் என்பதே வள்ளுவர் கருத்து என்று தோன்றுகிறது... இந்தப் புதிய பார்வையில் திருக்குறளை நோக்கினால் வள்ளுவத்தின் பல புதைபொருள்கள் வெளிப்படக் கூடும் "

வள்ளுவ அரசியல் கோட்பாடுகளைப் பற்றிய பல புதிய எண்ணங்களை எழுப்புவதாக அமைந்த இக்கட்டம் சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது. தமிழ்ச்சங்க நிர்வாகிகளும் நூல் நிலையத் தொண்டர்களும் அறிஞர்களுக்குக் காப்பி வழங்கியதோடு, ஆராய்ச்சிக்கு வேண்டிய திருக்குறள் பற்றிய நூல்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி உரிய சமயத்தில அளித்த உதவி பாராட்டத்தக்கது

கட்டமுடிவில் திரு. சாலை இளந்திரையன் கொண்டுவந்த பின் வரும் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. "தமிழ் ஆட்சி மொழியாகவும் பாடமொழியாகவும் வரும்போது பலதுறையிலும் கலைச்சொற்கள் நிறையத் தேவைப்படும். இவைகளை இலக்கியங்களிலும் மற்ற நூல்களிலும் தேடுவதோடு, இன்று மக்களிடையே வழங்கும் இடமொழிகளில் கிடைக்கக்கூடிய (பல தொழில்கள், கலைகள் சம்பந்தமான) சொற்களையும் திரட்டவேண்டும் இதுபற்றிய ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளில் வெளியிட்டும், பொது நிறுவனங்களுக்கு அனுப்பியும், இந்தச் சொற்சேகரிப்புப் பணியில் தமிழ் மககள் அனைவரையும் ஈடுபடுத்தவேண்டும். அவ்வாறு எல்லோரும சேகரித்து அனுப்பும் சொற்களை ஆராய்ச்சி அரங்கம் தக்க அறிஞர்களின் துணையுடன் வகுத்து, வகைப்படுத்தி, விளக்கி நூலாக்கித் தர வேண்டும். தில்லித் தமிழ்ச்சங்கம் சொந்தத்திலோ பிற நிறுவனங்களின் உதவியுடனோ அதை வெளியிட வேண்டும் "

அரங்கத்தின் அடுத்த கூட்டத்தை 10—1—65 ஞாயிறு மாலை நடத்துவது என்றும், அதிலே மிராண்டாக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருமதி. வாசுகி, " வள்ளுவப் பெண்மை " என்ற பொருள் பற்றி ஆய்வுரை நிகழ்த்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சாலை. இளந்திரையன்.

# தன்னலத் தாண்டவம்!

புலவர், இ. நா. அறிவுஒளி

தன்னலம் உயிர்களுக்கு இயற்கை அளித்திருக்கும் ஓர் இயல்பூக்க உணர்வாகும். தன்னலம் போற்றுதவர் உலகில் எவருமிலர். 'நான்,' 'எனது' என்னும் உணர்வு இருக்கும்போது தன்னல உணர்வும் இருப்பதியல்பே. ஆயின், தன்னலம் பிறர் நலனுக்கு ஊறுவிளைவிக்காத அளவில் இருக்கவேண்டும். இப்பண்பே மக்கள் உணர்ந்தொழுக வேண்டிய அடிப்படை யறிவு. இத்தகு அறிவுப் பண்பைக் கற்பித்து மக்களைப் பண்படுத்தி உயர்த்துவதே இலக்கியம்—கலை—மொழிகளின் திருத்தொண்டாகும்.

அளவுகடந்த தன்னலம் உண்மையறிவையும், பண்பையும், அழிக்கும். தன்னலவெறி தனக்கும் பிறர்க்கும் கேடுபயக்கும். நம் நாட்டரசு மக்களிடம் பண்பும் ஒழுக்கமும் நிலவுறுதற்கு வழி கோலாமல், ஒழுக்கக்கேட்டை ஊக்கிவிட்டதாலேயே இன்று நாடு, காடாகி விட்டது.

உலகில் தன்னலத்தின் தனித்தாண்டவம் தலைவிரித்தாடுகிறது. அரசியலில் தன்னலவெறி, கட்சிகளிடம் தன்னலவெறி, அதிகாரிகளிடம், வணிகரிடம் தன்னலவெறி, முதலாளி—தொழிலாளிகளிடம் தன்னலவெறி, மக்களிடம்—படித்தோரிடம்—கலைஞர்களிடம் தன்னலவெறி என யாண்டும் தன்னலத்தின் தகாத தாண்டவம் வெறியாட்டமிடுகிறது!

விளைவு ?

பஞ்சம்! பட்டினி! பொருள் கிடைக்காமை! பொருள் பதுக்கல்! சீர்கேடு! விலையேற்றம்! குழப்பங்கள்! கைக்கூலித் திருவிளையாடல்கள்? கள்ளவணிகப் பேயாட்டம்! கருப்புச் சந்தையின் செல்வாக்கு! உதிரிகளின உயர்வு! ஒழுக்கக்கேடு! மறச்செயலின் மதர்ப்பு! தடியடி! கொலை! கொள்ளை! காவலர் ஆர்ப்பாட்டம்! அரசியலில் நிலையற்ற தத்தளிப்பு! மக்களின் அச்சம், சீற்றம்! கட்சிகளின் தகிடுதத்தங்கள்! மன்பதையின் சமன்பாடின்மை! பொருளியல் ஏற்றத்தாழ்வுகள்! குடும்பப் பூசல்கள்! கடன் காய்ச்சல்! காசு கிடைக்காத வறுமை! வட்டிபிடி தொற்றுநோய்! முறைகேடு! அறக்கொலை! தோல்விகள்! போட்டிகள்! விழ்ச்சிகள்!...... அப்பப்பா! எவ்வளவு கொடுமைகள்!

இந்நிலை மாறவேண்டாமா? இக்கொடு நோய்களுக்கு மருந்தென்ன?

நம் நாட்டில் அனைத்துத் துறையிலும் நம்மியற்கைச் சூழ்நிலை—வாழ்நிலைக் கேற்ப கொள்கைகளையும், அமைப்புக்களையும், திட்டங்களையும், செயல்முறைகளையும், நடைமுறைகளையும், ஆக்கங்களையும், சட்டதிட்டங்களையும் வகுக்காமல், பிறரை—பிறநாட்டைப் பார்த்து

'அப்படியே' பார்த்துக் கடைப்பிடிக்க—நடக்க—முற்பட்டது பெருங் குறையாம். அரசியலமைப்பிலிருந்து, சட்டதிட்டந் தீட்டுவது வரை அவற்றைச்செயற்படுத்தி ஆள்வதுட்பட அனைத்தும் 'போலிகை'யே?

நம் நாட்டில் அவ்வம் மாநிலங்களுக்கேற்பத் தனித் தனி முறைகளும்—நிலைகளும் கடைப்பிடிக்கப்படாததும் தவறேயாம், திட்டங்கள் தீட்டுவதிலும் நமக்கேற்ற 'தனிமையம்' இல்லை! அதிலும் 'பார்த்துப் பின்பற்றலே' நடந்துவருகிறது. இதனால்தான் சிக்கல் களை முன்கூட்டி உய்த்தறியுமாற்றல் அரசியலாளர்க்கு அமைய வில்லை. ஒவ்வொரு துறைவல்லுநரும் 'தனித் தன்மையாற்றல்' குறைந்தவர்களாக இருந்தமையால் சிக்கலுக்குத் தீர்வுகாணவும், பிறரையும்—பிறவற்றையும் பார்த்துச் செய்யவே முயன்றனர். ஆகவே அனைத்தும் குழப்பக் கோளாருகிவிட்டது!

நம்நாட்டுச் சீரிய தலைவர்களென விளம்பரப் படுத்தப்பட்ட வர்கள் சில துறைகளுக்கும், சில நிலைமைகளுக்கும் அளித்த, நம் நாட்டுக்கேற்ற திட்டங்கள் சிலவும் படுதோல்வி யடைந்துவருவதை உன்ன வேண்டும். அவர்கள் திட்டங்கள் நடைமுறையில் தோற்ற தேன்? அவர்கள் தமக்குப்போதிய அறிவோ, அடைவாற்றலோ இல்லாத துறைகளில் 'பகற்கனவு' திட்டங்கள் அளித்தனர். அத் திட்டங்களை 'வல்லார்' பால்கொடுத்து, நடைமுறையில் செயல்படுத் துதற் கேற்பச் 'செப்பனிடாததும்' அடுத்த பெருங் குறையாம்.

கட்சிச் செல்வாக்காலும், தலைவர்களைக் கண்மூடிப் போற்றிப் பறையறையும் விளம்பர ஆற்றலாலும் திட்டங்களுக்குப் பெரிய அளவில் விளம்பரமும், புகழும் உண்டாக்கினர். மக்கள் இந்த ஆர்ப் பாட்டத்தையும் செய்தித்தாள்களின் போலி விளம்பரப் புகழுரை யையும் கண்டு ஏமாந்தனர். கட்சி, ஆட்சித் தகுதியிலிருந்ததால் திட்டங்களை ஆரவாரமாகச் செயற்படுத்தியது. அடிப்படையிலேயே 'உயிரற்ற திட்டக்குழந்தைகள்' செத்தே பிறந்தன. அவை இறந் ததைக்கூட அறியுந் திறம் திட்டத்தைப் பெற்றவர்க்கும், விளம்பரம் செய்தவர்க்கும் இல்லை!! அத்துணை குறையறிவுடையோர் திட்டங்கள் தீட்டியிருக்கின்றனர்!

பலகாலம் திட்டக்குழவிகளைத் தொட்டிலில் போட்டுப்பூவிட்டுப் புத்துடையுடுத்திப் பொட்டிட்டுப் புன்னகையோடு தாலாட்டுப்பாடிச் சீராட்டிக் கொஞ்சினர். மக்களும் ஆவலோடு 'திட்டக்குழந்தைகள்' வளரும்; நடைபயிலும்; மழலை மொழியும்; சிரிக்கும்; ஆடும்· பாடும் என ஏங்கி எதிர்பார்த்தனர். அந்தோ! பிணக்குழந்தை பிழைப் பதேது? வளர்வதேது? வாழ்வதேது? நெருக்கடி நேர்ந்து உண்மை யாகக் கண்திறந்து பார்த்தபோதுதான் 'உயிரற்ற ஊன் கூடு' தொட்டிலில் கிடப்பதை உணர முற்பட்டுள்ளனர்! காலங்கடந்த அறிவுதான்! இனியேனும் பிணத்தைப் புதைத்துவிட்டு, வேறு நற் குழந்தைகளைப்பெற முயலவேண்டும்! அவற்றையேனும் ஒழுங்காக, உயிரோடு வளர்க்க முனையவேண்டும்!

நம்நாடு இயற்கையமைப்பால் வேற்றுமைகளோடுகூடிய பரந்த நாடு. இதை ஒரே நாடாக ஆக்கிவிட்டதாலேயே எல்லா வகையிலும் ஒரே வகைக் கொள்கையைச்—செயல்முறையைக்—கடைப்பிடிப்பது எனக் கருதுவது பெருமடமையாகும். பேச்சுக்கு அக்கூற்று ஒரு சில அறியாருக்கு இனிக்கலாம். ஆனால், உண்மையில் இக்கூற்றும், இதனைச் செயற்படுத்தலும் பெருந்தீங்கே பயக்கும்.

அனைத்துப் பகுதியும் ஒத்த வகையில் வளரவேண்டுமென வாய்கிழியப் பேசுபவர்கள், நடைமுறையில் சில இடங்களில் பெருந்தொகைச் செலவில் ஆக்கத் திட்டங்களைச் செயற்படுத்திவிட்டுப், பிற பகுதிகளைப் பின் தங்கச்செய்து ஓரவஞ்சகம் செய்துவிட்டனர். குறிப்பாகத் தமிழகம் பெருந்திட்டங்களற்ற பகுதியாக அமைந்துள்ளது பெரிதும் வருந்துதற்குரியதாம். தொழிற்றுறை, அறிவியல் ஆய்வியற்றுறைகளில் மிகப் பிற்பட்ட பகுதியாகத் தமிழகம் ஒதுக்கப்பட்டமை மக்கள் மறக்கமுடியாததாகும். இதனால் நாட்டின் ஒரு பகுதி செல்வ உயர்வடையவும், மற்றொரு பகுதி செல்வ நிலையில் தாழ்வடையவும் வழிகோலப்பட்டுவிட்டது, மாநிலத்துக்கு மாநிலம் பொருளியல் ஏற்றத்தாழ்வு உருவாவது வருங்காலத்தில் பெருங்கேடு விளைக்கும்.

நம் நாட்டாட்சி போட்டுள்ள அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் 'கடன்' என்ற நீர்க்குமிழிமீது கடைக்காலமைத்து 'போலிகைத் திட்டங்களாகிய' அட்டைச்சுவர்களமைத்துக் கட்டப்பட்டிருக்கின்றன. 'ஓரளவே கடன் வாங்கலாம்; பேரளவில் கடன் வாங்குதல் தீது' என்ற உண்மையை அரசு உணராதது பல பேரிடர்களுக்கு வித்தாகியுள்ளது; கடனை வாங்குவது எளிது; அதனை அடைப்பது அரிது அந்த நிலையைநாடு விரைவில் அணுகும்போது இன்றைய சிக்கலைவிடக் கொடியதொரு போராட்டச் சூழல்-நெருக்கடி-நேரும்,

கடனைப் பலவழிகளில் செலவிடப்பட்ட நிலை பற்றிய விளக்கம் ஏதும் புலப்படவில்லை. அக்கடன் எவ்வளவு ஆக்கம் படைத்துள்ளது என்பது ஆராயப்பட வேண்டியதொன்றும்!

'போலிப்பொது அறக்கொள்கை' ஆட்சியின்வலிவை அசைத்துவிட்டது. உண்மைப் பொதுஅறம் செயற்படுத்தப்பட்டிருப்பின் நாடு சிறந்திருக்கும் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்தோரில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மர் கயவராய்ப் பொய்யராய்க் கொள்ளைக்காரராய்க் கள்ளவணிகராய்க், கையூட்டுபெறுபவராய், ஊழல் புரிவோராய்த் தன்னல வெறியராய்ப் பரந்த நோக்கமிலாக் குறுகிய குள்ள உள்ளத்தினராய் அமைந்தது பெரிதும் நாணத்தக்கது. இதற்குக் காரணம் கட்சிகளின் வெறியாடலும், மக்களின் அரசியலாய் வறிவின்மையுமே! கையூட்டுபெற்றுத் தக்காரல்லாருக்கெல்லாம் வாக்கோலை ஈந்து தேர்ந்தெடுத்த குற்றம் மக்கள் செய்த மடமைசால் குற்றமன்றோ! 'பொதுஅறக் கொள்கை' பேசித்திரிவதால் செழிக்காது. அமைச்சர்களும், கட்சித் தலைவர்களும், ஆட்சியாளரை மறைவில்

ஆட்டிவைப்போரும் தனியுடைமைப் பித்தர்களாக இருந்துகொண்டு, மற்றவர்களுக்குப் 'பொதுஅற அறவுரை' கூறுவதுபேதமையல்லவா?

நல்லூதியம்தரும் அனைத்துத் துறைகளையும் அரசு தன்னுட்சிக் குரிய 'பொதுத் துறையாக' ஆக்கிச் செம்மையாக நடத்திவந்திருந் தால் பொருட்சிக்கல் அரசுக்கு நேர்ந்திராது. நேர்மையான அதி காரிகளை அமைக்க அரசுதவறியது பெரும்பிழை. சட்டங்களையும் (முன்னுக்குப்பின் முரணுக) அளவுக்குமீறி உண்டாக்கி, மக்களுரி மையை மிகமிகக் குறைத்தும் சிதைத்தும் சீர்குலைத்தும், கட்டுப் படுத்தியும் அடிமைச் சிறையிலாழ்த்தியது பெருந்தவருகும்.

மிகுந்த வரிகள் மக்களை நசுக்கியதால் பொருள் விலையேற்றம் உச்சாணிக் கிளைக்கு ஏறியது' பல முனை வரிகளைக் குறைத்திருந் தால், வாணிகச்சீரும், விலை ஏற்றமின்மையும் அமைந்திருக்கும். உணவுப் பொருள் விற்பனைக் கழகங்களை ஊர்கள் தோறும், மக்கள் தொகைக்கேற்ப உண்டாக்கி விற்பனைசெய்ய முனைந்திருந்தால், வணிகர் செருக்குப் போக்கையும், கள்ள வாணிகத்தையும் குறைத் திருக்கலாம். ஏழைகளுக்கு இதனுல் பெரும்பயன் விளைந்திருக்கும். அரசுக்கும் நிறைந்த அளவில் பொருள்வருவாய் மிகுந்திருக்கும்.

'மிகை ஊதியம்' 'கருப்புப் பணம்' எனவெல்லாம் மலிந்தமைக் குக்காரணமே அரசுதான். ஆட்சிப்பொறுப்பினர் முதலாளிகளை ஓம்பும் செவிலிகளாக அமைந்ததே இம் மிகைச்செல்வக் கொழிப்புக் கடிப்படை. குறித்த முதலாளிகளுக்கே பல தொழில்கள், பல முத லீட்டுத் துறைகள் நடாத்திட அரசு 'உரிமை' நல்கியது பெருந்தவ ருகும். தன் கட்சிக்காரர் என்ற பற்றும், தன்னுறவினர், நண்பர், மேலிடத்துச் செல்வாக்குடையவர் என்ற தன்னலமும், கைக்கூலி பெற்றமையும் முறைகேடான ஆட்சியை உருவாக்கிவிட்டது.

குடியாட்சி முறை என்பது இவ்வளவு சீர்கேடுகளைப் பெற்றிலங் குவது பெருந்திகைப்பையும் அச்சத்தையும் நல்குகிறது. அரசியலைத் தன்னலத்துக்குப் பயன்படுத்தும் தீமை ஒழியாத வரை எவ்வகை ஆட்சிமுறையும் நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கவே பயக்காது.

மேலிடத்தினர், அமைச்சர் போன்ருரின் குற்றங்களை மூடி மறைத்துப் பூசி மெழுகிய கயமை, கொடுமையிற் கொடுமையாம்! பொதுநலனுக்குக் கேடு சூழ்ந்தோரை, அவர் எவரேயாயினும் 'கொலையொறுப்பு' நல்கி, அறத்தை நிலைநாட்டவேண்டும். காவல் துறை, அறத்துறைகளில் கட்சிச் செல்வாக்கும், கைக்கூலிச் செல் வாக்கும், தகுதிச் செல்வாக்கும் போராட்சி செலுத்தி வருவது நனி கேடு பயப்பதாம். இன்னும் இந்நிலை மாறவில்லை. காவலாள் தொட்டு, காவற்றுறையின் மீயுயர் தலைவர்வரை கைக்கூலி வாங்கு வதை 'மாமூல்' என்ற பிறமொழிச்சொல் வழக்கோடு சுட்டிப் பேசப் படுவதை ஓர்க. இஃது அரசினருக்கும் நன்கு தெரியும் ஆயினும்

காணுக்கண்ணராகவும், கேளாக் காதினராகவும் இருந்து, அவர்கள் கயமையை வளர்த்து உரமூட்டிவிட்டு ஊருக்கு அறிவுரைகள் கூறுவது மிகக் கீழ்மையல்லவா?

பெரும்பான்மை ஊராட்சி, நகராட்சி மன்ற உறுப்பினரும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினரும், அத்துறைத் தலைமையரும் அமைச்சரும் கள்ளக்கூலி கொடுத்தே வாக்குகளையும் தகுதிகளையும் களவாடியுள்ளனர். இதனினும் கொடிய 'குடியாட்சிக்கொலை' வேறிருக்காது; இவ்வாறு தகுதியைக் களவாடிப் பெற்றமையால்தான் அவர்கள் தன்னலவெறியும், தம் முன்னேற்றமொன்றே குறிக்கோளாகக்கொண்ட நெறியும் உடையவராய்க் காசு திரட்டியும், தம் தொழில், வாணிகம், செல்வாக்குகளைப் பெருக்கியும் அமர்ந்து செருக்குகின்றனர். ஆகவேதான் அவர்களால் நாடு நலனுறவில்லை, அறம், நேர்மை, மக்கள் நலம், பொதுத்தொண்டு, கொள்கை, கட்சி என்பனவெல்லாம் பொதுமக்களை ஏமாற்றப் பயன்படும் சொற்சிலம்புகளாகவுள்ளன! இவற்றைப்பற்றி உயர்தகுதியினர் அணுவளவும் கவலைப்படுவதே கிடையாது.

ஆளுங்கட்சியும், அதன் தலைமையரும் மக்கள்விருப்பு வெறுப்புக்களையும், எதிர்க்கட்சியின் குரலையும் பொருட்படுத்தாது இயங்குவது குடியாட்சி இலக்கணத்துக்கே மாறான செயலாகும்,' வாக்குகள் எண்ணிக்கைகொண்டே ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதும், வீழ்த்துவதும்தான் அறமஎன்ற எண்ணம் அறிவு வழிப்பட்டதாக இல்லை. வாக்கெடுப்பு உறுப்பினரின் மனச்சான்று ஒப்பியதாக அமையவில்லை தற்போது. கட்சிக் கட்டுப்பாட்டோடு கைதூக்கி வாக்களிக்கும் நிலையே இருக்கிறது, இதுமுறைகெட்டபோக்கு. நேர்மையான ஆட்சிக்குரிய நடத்தை இஃதன்று. இதனை மக்கள் உணர்ந்து, அரசுக்கு அறிவுறுத்த வேண்டும். ஆள்வோர் சில பல நிலைகளில் செருக்கோடு 'தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்போராய் இயங்கிவருதல் வெறுக்கத்தக்கதாகவுள்ளது.

தமிழைக் கல்லூரி மொழியாக ஆக்குவதைத் தனியொருவரின் விருப்பமின்மையால் தள்ளிவைத்துவிட்ட தகாத போக்கு, கயமைகளுள் சீரிய கயமையும் கொடுமையுமாகும். பெரும்பாலோர் நன்மைகளை மதிக்காமல் சிலர் நலனுக்கே அரண்செய்யும் தீங்கு ஆட்சிக்கு வீட்சிதரும் என்பது அடிப்படை அரசியல் நூற்பா.

வேண்டாத சிக்கல்களை இழுத்துக் கட்டிக்கொண்டு மடமையுறுதல் ஆட்சியின் மாட்சிக்குக் கேடுதரும். மொழிச் சிக்கலும் இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரால் நடக்கும் விலங்குத் தன்மை சான்ற புன்மைகளும், ஒருசாரார் செல்வாக்கும் இனைய வேண்டாத சிக்கல்களேயாம். ஓரிருமாநிலத்தார். இந்திய நாட்டை ஆட்டிவைக்க விழைந்து, செயற்படுந்தீங்கு பெருமடமை சான்றது. இதற்கு ஒரே ஒரு மருந்தே உள்ளது.

வட இந்தியாவுக்கு ஒரு பாராளுமன்றம் இருப்பதுபோலத் தென்னகத்துக்கு ஒரு பாராளுமன்றம் அமைக்கவேண்டும். தென்னகப்பாராளுமன்றம் தென்னகத்துப் பொருளியல் — அரசியல் — ஆட்சிப்பொருப்புக்களை நடாத்தும். பொதுநாட்டரண், வேறுசில உலகத் தொடர்புச் செயல்களில் நாடு ஒன்றியிருக்கும். அதே போதில் உரிமைச் சிதைவு நேராது! வடவிந்தியாவுக்கு இந்தி ஆட்சிமொழியாக அமையட்டும். தென்னகத்துக்குத் தமிழோ, ஆங்கிலமோ பொது ஆட்சி மொழியாக அமைய வேண்டும். இதனால் இந்தித் திணிப்பு மடமைநோயும் ஒழியும். இந்நிலை உருவானால நாட்டுப் பிரிவினையுணர்ச்சிவளராது வடநாடு, தென்னாட்டைச் சுரண்டும் நிலையும் உருவாகாது. திட்டங்கள் பரவலாக வடக்குக்கும் தெற்குக்கும் ஒத்தவகையில் அமைக்கப்படும. பொருளியல் ஏற்றத் தாழ்வும் விலகும். இதனை ஏற்காதுபோனால் பின் விளைவுகள் விரும்பத் தகாதவைகளாக அமையநேரும்.

வடக்குப் பாராளுமன்றத்தைத் தெற்குப் பாராளுமன்றமோ; இதனை அதுவோ எவ்வகையிலும் அடக்கியாள முடியாத வகையில் புது அரசியலமைப்மை உருவாக்க வேண்டும்.

உரிமைப் போராட்டகாலத்தில் சொன்னவை, எழுதப்பட்டவை எக்காலத்தும் நிலைபெற வேண்டும் என எதிர்பார்ப்பது முறையற்ற எண்ணம். காலச் சூழ்நிலைக்கேற்ப அரசியல் வளர்ச்சியும், அரசியல் போக்கும் அமையும்.

தனித்தனி மாநிலங்கள் சிலசில வகையில் தம்தம் நிலை—ஆற்றலுக்கேற்ப தனிப்போக்கில் வளர்ச்சியுற-செயல்பட—ஆட்சியுரிமை அளிக்கவேண்டும். தொடர்ந்து ஒருசிலரோ, ஒரே கட்சியோ, ஒரு சில குடு பத்தாரோ ஆளும் இழிநிலை முற்றும் ஒழிக்கப்படவேண்டும். கண்மூடித்தன்மையாக அரசியலாளர்களைத், தலைவர்கள் என் போரைப் போற்றி ஒழுகும் 'ஆட்டுமதி, ஒழியவேண்டும்.

கல்வித் துறையில் ஆட்சிமொழியும், அரசியல் வாடையும் மிகுதியாகம் கலந்துவிட்டதால்தான் கல்வித் திறன் குறைந்தது. ஆசிரியருக்கு நல்ல சம்பளமும், ஆண்டுக்கு ஒருமுறையேனும் பரிசுத் தொகையும் (போனசு) ஊக்கவுரையும் நல்காதது கல்வியின் முற்போக்குக்குப் பெருந்தடையாக உள்ளது. ஆசிரியர் சம்பளம் நல்ல முறையில் வளர்ச்சியுறாத இழிநிலை இவண் சுட்டிக்காட்டுதற்குரிய தென்பேன். பலமொழிக் கலவி வேண்டாதது என்பேன். தொழில், உழவு, மின், பெறியியல், அறிவியல், தாய்மொழி, கலைகள் பயிற்சியே போதியதாம். விருப்பபாடமாக ஆங்கிலம் பயிற்றுவது சாலும். அறிவும், தொழிலும், எண்ணுமாற்றலுந்தான் மக்களுக்கு மிகமிக இன்றியமையாததும் வாழ்வுக்கு உதவுவதுமாகும். பன்மொழிப் புலமை எல்லார்க்கும் பயன்படாததும்; வீண் முயற்சியுமாகும், இக்கருத்துக்களை நாடு சீர்தூக்கி உணர்வது நலமாகும். இன்றேல் தன்னலத் தாண்டவம் பல நூற்றுண்டுகளுக்குத் தொடர்வதைத் தவிர்க்கமுடியாது.

---

# வாய்மை.

ஆசிரியர், கோ. கோவிந்தசாமி,
திருமுக்கூடல்.

உலகில் நாம் காணும் மாந்தர் பலர். அம்மாந்தரும் இருவகையினராவர். வாய்மையைப் போற்றுவோர், அதனைச் சிறிதும் மனதிற் கருதாது பொய்மையைப் போற்றுவோர். பொய்யுரைகூறி வாழ முற்படுவோரைக் காணும்போது அவர்கள் பால் இரக்கமே மேலிடுகின்றது. பிறரை வஞ்சித்துப் பொருளைக் கவர்வதற்காக அன்னார் வாய்மையினின்றும் வழுவாதவர் போன்று நவிலும் பொய்யுரைகள் அளவிடற்கரியன. கானலை நீரென எண்ணி ஏமாறும் மான்போன்று கள்ளமில்லா உள்ளம்படைத்த மாந்தர் அவர் தம் கூற்றை உண்மையெனக்கருதிப் பின்னர் ஏமாற்றமடைகின்றனர். எல்லையற்ற துன்பத்தில் ஆழ்ந்து வருந்துகின்றனர்.

பொய்மையைப் பேணிவாழும் வாழ்வு சிறந்ததா? எனின் இல்லை என்றே சான்றோர் நவில்வர். பொய்மையைப் போற்றிவாழும் வாழ்வு ஒரு வாழ்வாகாது. அத்தகைய வாழ்வினை மேற்கொண்டோர் நெடுநாள் வாழினும் அவர் மாந்தரிற்கடையரேயாவர். உயிரோடிருந்தும் மடிந்தவரேயாவர். தம் நலத்திற்காகப் பிறரை வஞ்சித்துச்சேர்க்கும் செல்வமும் நிலைத்துநிற்கக்கூடியதன்று. அளவிறந்து ஆவதுபோலத் தோன்றினும் அழியக்கூடியதேயாகும். உள்ளொன்று வைத்துப் புறமொன்றுபேசும் அவர் தம்வாழ்வு இழிந்த வாழ்வேயாகும்.

தமக்கு எத்தகைய இடர் நேரினும் துயருறாது, வாய்மையே பெரிதுஎனக் கருதி வாழும் வாழ்வே சிறந்த வாழ்வாகும். வாய்மையுடையோர் தமக்கு வறுமைவரினும். அவ் வறுமையின் பொருட்டு இழிசெயல்புரிய விழையார்.

வாய்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெருந்தகையினர் இருவர். தன் அரியணை துறந்து, இல்லத்தலைவியை ஓர் அந்தணனுக்கு விற்றதோடு தானும் ஓர்புலையனுக்கு அடிமையாகிச்சுடலையைக் காக்கும்நிலை வந்தபோதுமட்டுமல்ல. தன்னுடைய துணைவியைத் தன் கைவாளினால் வெட்டி வீழ்த்தவேண்டிய நிலை வந்தபோதும் மனந்தளராது வாய்மையைக் காத்த மன்னன் அரிச்சந்திரன். அவன் புகழ் மறையாது நிலவி வருவதைக் காணலாம்.

மற்றொருவர் தன் தாய்நாடுகடந்து வெளிநாடு சென்றபோதும் தன்னை ஈன்றதாய்க்கு அளித்த உறுதிமொழியை மறவாது, ஒழுக்கத்தினின்றும் சிறிது பிறழாது தன்னைப் பாதுகாத்து. தனது உறுதிமொழியை இறுதிவரை காத்தவர் அண்ணல் காந்தி அடிகள்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற வள்ளுவரின் பொய்யாமொழிக்கேற்ப மாந்தர் உள்ளங்களிலெல்லாம் இடம் பெற்றிருப்பவர் அவர். தாம் வாய்மையுடன் திகழ,

ஒழுக்கத்துடன் மிளிரக்காரணம் அரிச்சந்திரன் நாடகமேயாகும். எனத் தம்மைப்பற்றி அவர் வரையும் வரலாற்றில் அவரே இயம்பு வதை அறியலாம்.

வாய்மை என்பது யாது? பிற உயிர்கட்குத் தீமைபயவாத சொற்களைச் சொல்லுதலேயாகும்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

தம் நன்மைக்காகத் தம்முடைய நெஞ்சமறிய பொய்கூறி வாழ முற்படுகின்றனர் சிலர், அவ்வாறு பொய்புகன்று பிறரை வஞ்சித்துப் பிழைக்க முயல்பவர் நெஞ்சம் என்றேனும் ஒருநாள் தம் செயலை எண்ணித் துன்புறு.

" தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும் "

ஒருவன் தன் மனத்தோடு பொருந்த வாய்மையைக் கூறுவா னாயின் அவன் தானமும் தவமும் ஒருங்கே செய்வாரினும் சிறந்தவ னவான். பொய்யாமை அறங்கள் அனைத்தையும் நல்கும். பொய் பேசாதிருத்தலுக்கு ஒப்பாகிய புகழ் இல்லை.

பொய்மையைத் தவிர்த்து வாய்மையைப் பேண முற்படும் மாந் தன் வேறு அறங்களைச் செய்யவேண்டியதில்லை. பிற அறங்களையும் அது அவனுக்கு அளிக்கும் தன்மையாகும்.

மாந்தனுடைய யாக்கையின் புறம் தூய்மை பெறுவது நீரினு லாகும். அகமோ வாய்மையினுல் தூய்மை பெறுகின்றது. வாய்மை இன்றேல் அகம் தூய்மை பெருது.

" சேய்மையன் மையிர்க் கொருதுணை யெனச்சிறந்த
வாய்மையா லுலகந் தூய்மையா மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொலின் வேறுளதோ "

எனக் கூறுகிறது அரிச்சந்திர புராணம்.

இற்றைஞான்று நற்பண்புமிக்க வரும் பொய்மைக்கு இடந்தரும் நிலை ஏற்படுகிறதே என மாந்தர் ஏக்கமுடன் மொழிவதையும் உண ராதிருக்க இயலவில்லை. அவ்விதம் ஏக்கமுறுபவருக்கும் வள்ளுவப் பெருந்தகைகூறும் அறிவுரை பொருந்துவதாக உள்ளது. பிறர்க்குத் தீமைபயக்காமலிருக்குமாயின் பொய்மையும் வாய்மையைப் போன் றதேயாகும் என்கிருர்.

" பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் மெனின் "

பொய்புகலும் தன்மையுடையோரிடம் பொய்கூறின் வெற்றி பெற இயலும். மாருக சான்ருேரிடத்திலும், தாய்தந்தையரிடத்

(முன் தொடர்ச்சி)

# புகார் முதல் வஞ்சி வரை

சி. கோவிந்தராசன்

## புதுப்பிக்கப் பெற்ற பூம்புகார்

பூம்புகார் முழுவதும் கடற்கோளால் அழிந்துபோயிற்று என்னும் இலக்கியச் சான்றுகள் வரலாற்ருராய்ச்சிக்கு ஏதுவாக அமையவில்லை என்பதை முன்னர் கூறினேம். புகார்த்துறை கடலுக்கு இரையாகி மறைந்துபோக, நகரின்மேற்குப்பகுதி பல காலங்களில் உண்டான காவிரி வெள்ளத்திற்குள்ளாகிச் சிதைந்து மணல் மேடிட்டும், வெளியாகவும் வரிசிலற்றும் கிடந்த பின்னர், பிற்காலச் சோழராட்சியில் ஆளவந்த சோழபுரம் தொடக்கமாக, உருவாக்கி வகைப்படுத்தப்பெற்று விளங்கி இருக்கிறதென்பதைக் கல்வெட்டுச் சான்றுகளால் கூர்ந்து அறிய வியலுகின்றது. கி. பி. பதின்மூன்ரும் நூற்ருண்டில் பாண்டிய நாட்டில் சிறப்புற்ருேங்கிய எம்மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரின் ஆணைக்கு உட்பட்டு சோழநாடு ஒருகால் நின்றபோது, அப்பாண்டியன் திருக்களர் என்னும் ஊரில் வெட்டுவித்த கல்வெட்டும் பூம்புகாரைப் பற்றிக் கூறு

---

(336-ம் பக்கத் தொடர்ச்சி)

திலும், தன் அறியாமையைப்போக்கி நல்லறிவு கொளுத்திய ஆசிரியரிடத்திலும் பொய்கூறின் அதனுல் விளையுந் துன்பம பலவாகும்.

" பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியா
மவருக்குப் பொய்யாகாத
மெய்யருக்குப் பொய்யுரைத்தாற் றேய்பிறை
போல்தவங் குறையு மிடியுண்டாகும.
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா தென்றும்
உய்யவரு தேசிகர்க்குப் பொய்யுரைத்தால்
நரகமது உண்மைதானே "

தன் அகத்திலுள்ள வாய்மையை மறைத்து பொய்மைபுகல ஒருவன் முற்படும்போது, தனது பொய்க்கூற்றிற்கு மற்றும் ஓர் பொய் கூற நேர்கிறது. இவ்விதம் பொய்மேல் பொய் அடுக்கிக்கொண்டே செல்லவேண்டிய நிலை ஏற்படுமேயன்றிக் குறையாது. ஆதலின் பொய்மையை அறவே அகற்றுதல் நன்று.

வாய்மையின் மிக்க அறங்கள் இல்லையாதலின் எங்கும் எவரிடத்தும் வாய்மை பேசுதல் மேன்மையைத்தரும். உலகிலுள்ள விளக்குகள் அனைத்திலும் சிறந்த விளக்குஎனச் சான்ருேர் கருதுவது பொய்யா விளக்கேயாகும். அகத்திலுள்ள இருளை அகற்றித் தூய்மைபெறச் செய்யும் விளக்கு அதுவேயாகும். எனவே மாந்தர் பொய்மையைத் தவிர்த்து வாய்மையைப் போற்றுதல் சிறந்ததாகும்.

கின்றது. அப்பொழுது பூம்புகார் "எழுபத்தொன்பது வளநாட்டுப் பதினெண்பூமிப் பூம்புகார்" என்ற அளவில் கூறப்பட்டுள்ளது. எனவே. சோழவளநாட்டு உட்பிரிவுகளுள் ஒன்றாகிநின்ற பூம்புகார் பதினெண்பூமி என்று அளவிடப்பட்டிருக்கின்றது. இச் சிறிய கருத்தினைக்கொண்டு சிந்திப்போமாயின், பூம்புகார் என்னும் எஞ்சிய ஊர்ப்பரப்பு பல உட்பிரிவுகளோடும் பிற்காலத்தில் ஓரளவு உருவாக்கப்பெற்றிருந்த உண்மை புலனாகின்றது.

## சிலம்பு தரும் செய்தி

தன் கணவனிடம் இன்முகம் காணும் விருப்பால் புன்முறுவல் செய்து, எஞ்சிநின்ற தனது சிலம்புகளையும் மாதவிக்குக்கொடுக்கும் பொருளுக்கு உரிமையாக்க ஒப்பிய பத்தினிப் பெண்டிராம் கண்ணகியுடன், வைகறைப் பொழுதில் புகார் நகரைவிட்டு மதுரைக்குப் புறப்பட்ட கோவலன். காவலர் அறியாது இடைகழி வாயிலைக் கடந்தான். பின்னர், இருவரும் திருமால் கோயிலை அடைந்து வலஞ்செய்து, புத்தவிகாரங்களையும் அருகன்கோயில் சிலாதலங்களையும் வணங்கி, நகர்ப்பெரும் வாயிலையும் கடந்து, இலவந்திகை மதிலுக்குப் புறத்தில் சென்று, காவிரியின் வடகரைச் சோலைவழியாகவே ஒருகாத தூரம் போய், ஓர் இளமரக்காவை அடைந்தனர். அவ்வளவில், வழிநடந்த இளைப்பால் கண்ணகி குறுக உயிர்த்து, "முதிராக் கிளவியின் முள்ளெயிறிலங்க மதுரை மூதூர் யாது"என; கண்ணகியின் தளர்ச்சிக்குத் துன்பங்கொண்ட கோவலன், வருத்தத்தை மறைக்க நகைமுகம்காட்டி "ஆறைங்காத நம்மகனூட் டும்பர், நாறைங் கூந்தல் நணித்து" என்று, மாண்புடன் மறைபொருளாகச் சொல்லுகின்றான். இத்தகைய நிகழ்ச்சி, நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் சிறப்பிற்கோர் ஆட்சியாக நின்று படிப்பவரின் உள்ளத்தை உருக்குவதாக அமைந்துளது. தொடர்ந்து காவிய விளக்கம் செய்தலைவிடுத்து, காவிரியின் கரைவழியையும் காவிரியின் நிலையினையும் காண்போம்.

## புகாரிலிருந்து உறந்தை வரை

கண்ணகியின் வருத்தம் ஆற்றுதற்கு நல்லதொரு பெண்துணையாக அமைந்த கவுந்தியடிகளுடன், காவிரியின் வடகரை வழியாக மேற்கு நோக்கி வழிநடந்த கோவலன் கண்ணகி ஆகிய இருவரும், இடையே மருத நிலங்களின் வழியாக, நாளைக்குக் காதவழி நடந்து, அரங்கத்தை அடைந்தார்கள். அங்குள்ள சோலையிலிருந்த சாரணர்களைக்கண்டு வணங்கிய பின்னர் காவிரியாற்றைக்கடந்து தென் கரையிலுள்ள உறையூரில் ஓரிரவு தங்கினார்கள். வைகறையில் தென்திசை நோக்கிப் புறப்பட்டு ஓர் சோலையிலுள்ள மண்டபத்தில் இளைப்பாறினார்கள். அங்கு, குடமலைப் பகுதியிலுள்ள மாங்காடு என்னும் ஊரிலிருந்து யாத்திரையாக வந்த ஒரு முதுமறையோனைக் கண்டு, அம்மறையவன் வாயிலாக மதுரை செல்லுதற்குரிய நேரிய வழியினை அறிந்துகொண்டு புறப்பட்டனர். இவ்வளவே சிலப்பதிகாரம் தரும், கண்ணகியின் கால் சிலம்பு கடந்த நெறியின் முதற் பகுதிக்குரிய சுருக்கம்,

**வாணிகம் மிகுத்த மாட மதுரை :**

காவிரிப்பூம்பட்டினம் மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லா வளங்களும் மிகுதியாகப் பெற்றிருந்ததோடு வணிகத் துறையிலும் சிறந்திருந்ததைப் போலவே, அதே காலத்தில் பாண்டி நாட்டின் தலை நகராக விளங்கிய மதுரைமாநகர் எல்லா வளங்களும் நிறைந்த வணிகப் பெருநகராகவும் இருந்திருக்கின்றது. இதனை, மாதவியை விட்டு நீங்கியதோடு, தன் ஊரையும் விட்டு நீங்கி வாழ நினைத்த கோவலன், மதுரையை வணிகத்திற்குரிய இடமாகக் கொண்டானென்று, இளங்கோவடிகள் குறிப்பிடுவதிலிருந்து நன்கு அறியலாகும். இக்கருத்தினை, பெரிய புராணத்தில் போற்றப்பெறும் புனிதவதியாரின் வரலாற்றாலும் ஓரளவு அறுதியிடலாகும். பூம்புகாருக்குத் தெற்கே உள்ள காரைக்காலில் மனைவாழ்க்கை மேவிய புனிதவதியாரின் கணவன் தனதத்தன், தன் மனைவியைத் தெய்வமெனக் கருதிய பின்னர் பிரிந்துசென்று, வாணிகத்துறையில் தனி வாழ்க்கை தொடங்கிய இடம் மதுரைமாநகர் என்பதே பெரியபுராணம் தரும் குறிப்பாகும். இவ்வாற்றான் வணிகத் துறையில் வளம்பெற்றிருந்த பெருநகர் மதுரை என்பது தெளிவாகும்.

பாண்டிநாட்டுத் தலைநகராம் மதுரையில், அரசனும் விரும்பும் செல்வத்தையுடைய அங்காடி வீதியும், பயன்மிக்க இரத்தினக்கடை வீதியும், பொற்கடை வீதியும், அறுசுவை வீதியும் நிறைந்திருந்தமையைக் கோவலன் கண்டு வந்ததாக இளங்கோவடிகள் ஊர்காண் காதையுள் விளங்கவுரைத்துள்ளார். மற்றும் மதுரைக்காஞ்சியினுள் கூறப்பட்டுள்ள

" மலையவும் நிலத்தவும் நீரவும், பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேளத்துப் பண்ணியம் பகர்நரும் "

என்னும் பகுதியினால், மதுரைநகரில் பிறநாட்டுப் பொருள்களும் மணியும முத்தும் பொன்னும் கடைவீதிகளில் இடம்பெற்று விலை கூறப்பட்டன என்பது நன்கு புலனாகின்றது.

பண்டைகாலச் சான்றோர்களாகிய இளங்கோவடிகளும் மாங்குடி மருதனாரும், மதுரையில் சிறந்தோங்கிய வணிகத்துறைகளைச் சிறப்பிக்குங்கால், பொன்னும் மணியும் விலைபகரப்பட்ட நிலையினையே மிகுதியாகவும் விளக்கமாகவும் எடுத்துரைத்துள்ளனர். இதனால் மதிப்புள்ள அணிவகைகளும் இரத்தினங்களும் விலைபோகுமிடம் மதுரை என்பது பொதுவான செய்தியாக அன்று தமிழகத்தில் நிலவி இருந்திருக்கின்றதென்பது போதரும். இவ்வியல்பினை, வணிகத்தில் வழி வழி சிறந்து வந்த மாசாத்துவனின் மகனாகிய கோவலனும் நன்கு அறிந்திருந்தமையினாலேயே, பொன்னும் மணியும் புனைந்திழைத்த கண்ணகியின் காற்சிலம்பை மதுரையில் விற்று,

அதனால் பெறும் நன்பொருளை வாணிகஞ்செய்ய முதற்பொளாக்கி, இழந்த பொருளை ஈட்டுதற்கு உறுதிசெய்து மாடமதுரைக்குச் செல்லக் குறியிட்டான் என்பதை,

"சிலம்பு முதலாகச் சென்ற கலனோ
டுலந்தபொரு ளீட்டுத லுற்றேன் மலர்ந்தசீர்
மாட மதுரை யகத்துச்சென் றென்னோடிங்
கேடலர் கோதா யெழுகென்று நீடி"

என்று கோவலன் கண்ணகியிடம் கூறியதாகச் சித்திரிக்கும் சிறப்பு மக்கள் மனப்பாங்கின் இயல்பொடு தெளிவுறுத்துவதோர் கருத்தாகும். இவ்வழியே தன் சுற்றத்தினின்றும் நெடுந்தொலைவு நீங்கி கோவலன் வாழ்வதற்கும் மதுரை ஏற்புடையதாகவும் அமைந்தது.

வணிகத்தில் சிறந்திருந்த தலைநகாரம் மதுரைக்குப் பாண்டி நாட்டுத் துறைமுகப்பட்டினங்களாகிய கொற்கை தொண்டி ஆகிய பெருந்துறைகள் கடல் வாணிகத்துறையில் இணைந்திருந்தன. அதைப்போலவே தமிழகத்தில் விளங்கிய பிறநாடுகளிலிருந்தும் "வணிகச்சாத்து" என்னும் வணிகர் கூட்டம் தரைவழிகளால் தொடர்பு பெற்றிருந்தன. யவனர் என்று கூறப்பெறும் கிரேக்கரும் உரோமரும், சோனகர் என்று கூறப்பெறும் அராபியரும் பாண்டி நாட்டு மக்களோடு வணிகத்துறையில் மிகவும் பயின்று வாழ்ந்திருந்தனர். யவன வீரர்கள் மதுரைக் கோட்டை வாயிலைக் காத்துவந்த செய்தியை, 'கடிமதில் வாயிற் காவலிற் சிறந்த—அடல்வாள் யவனர்' என்னும் சிலப்பதிகாரம் ஊர்காண் காதைப்பகுதி உணர்த்துகின்றது. 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்' பாண்டியன் பருகி மகிழ்ந்த செய்தியை புறநானூறு புகன்றுளது. (புறம்–56). கி. பி. முதல் நூற்றுண்டில் வாழ்ந்த மேனாட்டு வரலாற்றாசிரியர் பிளினியும், யவன தூதனாக இந்தியாவிற்கு கி. பி. மூன்றாம் நூற்றுண்டில் வந்துற்ற மெகத்தனிசும் 'தமிழகத்துடன் உரோமக வாணிகத்தின் அளவு மிகப்பெரியதாகவே இருந்தது' என்று குறிப்பிட்டுள்ளனர். மதுரையிலும் பாண்டிநாட்டுப் பகுதிகளிலும் யவன நாட்டு நாணயங்கள் கிடைத்துள்ளமை, யவனரும் பாண்டிய நாட்டினரும் வாணிகத்தில் இணைந்து நின்ற உண்மையைப் புலப்படுத்துகின்றன. மற்றும், கி. பி. 13-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் பாண்டிய நாட்டுக்கு வந்த வெனிசு நகரத்தானாகிய மார்க்கபோலோ என்பானின் குறிப்பும், அக்காலத்திலேயே பாண்டிய நாட்டில் இருந்த மகம்மதிய ஆசிரியனாகிய 'வாசப்' எழுதிவைத்த குறிப்பும், (Elliot and Dowson Vol III) மதுரை வாணிகத்தில் சிறந்து வந்திருந்த உண்மையினைத் தொடர்ந்து விளக்கும் வரலாற்றுச் சான்றுகளாகவே அமைந்துள்ளன.

### சோழநாட்டுப் பெருவழிகள் :

இக்குறிப்புக்களால், வணிகத்தில் சிறந்திருந்த உள்நாட்டுப் பெருநகரும், பாண்டியராட்சிக்குரிய தலைநகருமான மதுரைமாநகர்க்கும், கடல் கடந்த வெளிநாட்டு வணிகத்தாலும் செல்வம்

மிருத்து. சோழரின் தலைநகராக விளங்கிய புகார்த்துறையுடன் கூடிய காவிரிப்பூம்பட்டினத்திற்குத் தரைவழிகள் வணிகத்துறையில் இணைந்திருப்பது இயல்பானதேயாகும். அவ்வழிகள் பெருமபான்மையும் ஆறுகளைத்தாண்டிச் செல்லும் தொல்லையின்றி, இயன்ற அளவில் கரைவழியாகவே அமைந்து வேண்டிய இடத்தில் குறுககிட்டுக் கொள்ளவும் ஏற்புடைத்தாக இருந்திருக்கின்றது. இதனை, சைவ சமயகுரவர்கள் தலங்கள்தோறும் சென்று திருமுறை ஓதிய முறையினைக் கூறும்பொழுது அவர்கள் மேற்கொண்ட நெடுவழிகளைத் தொடர்ந்து விளக்கமாகக் கூறும் பெரியபுராணச் செய்திகளைக் கொண்டும் அறிய முடிகின்றது.

பெரியபுராண ஆசிரியராகிய சேக்கிழார், பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குரிய சோழராட்சியில் விளங்கிய அமைச்சராவர். அமைச்சர் பதவி பெற்ற அப்பெரியார் தமது நாட்டின் அமைப்பியல்புடன் அண்டைநாடுகளின் அமைப்பினையும் நன்கு உணர்ந்தே இருக்க வேண்டும். எனவே, அவர் தமது அனுபவத்தில் கண்ட நாட்டுப் பெருவழிகளுடன், வரலாற்றுண்மைகள், கல்வெட்டு செப்பேடுகளின் செய்திகள் ஆகியவற்றையும் அடிப்படையாகக்கொண்டு, தமிழகத்தின் பண்டைநிலையினை நன்கு உணர்ந்த தெளிவிலேயே நூல் செய்துள்ளார் என்பதை, சமயச்சார்பில் தோன்றிய நூலாயினும் தமிழகவரலாற்றாய்ச்சிக்குரிய குறிப்புகள் பல இடம் பெற்றுள்ளமையை ஆராய்ச்சியாளர் உணர்த்துவதைக்கொண்டு உறுதிசெய்ய இயலுகின்றது. இவ்வாற்றான், சேக்கிழார் தமது காலத்திற்கு முன்னர் வாழ்ந்த அடியார்களின் நிகழ்ச்சிக்குரிய நாட்டுவழிகளை அளவிட்டுக் கூறியுளளமைக்கு, அவர் காலத்திலும் அவ்வழிகள் புழக்கத்தில் இருந்திருக்க வேண்டுமென்னும் குறிப்பு புலனாகின்றது. சேக்கிழார் கூறியுள்ள நாட்டுப்பெருவழிகளுள் சில இன்றும் இருப்பதைக் காணும்போது இளங்கோவடிகள் காலத்து நாட்டுப் பெருவழிகளுள் ஓரளவாவது அவர்காலத்தில் இல்லாமல் இருப்பதற்கில்லை என்ற ஆராய்ச்சித் துணிவும் பிறக்கின்றது.

இம்முறையிலும் பிற வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டும் பண்டைத்தமிழகத்திலிருந்த பெருவழிகளைத் திட்டமுடன் குறிப்போமாயின்; சோழ நாட்டின் கிழக்கு எல்லையாகும் கடற்கரைப் பட்டினங்களிலிருந்து மேற்கே தொடர்ந்து நெடிதாகச் செல்லும் வழிகளுள் தலைமையானதொன்று பூம்புகாரிலிருந்து தெற்கே படர்ந்துசென்று தென்மேற்கு எல்லையை நோக்கிக் குறுக்கிட்டு ஓடிய அளவில், நாட்டின் வரம்பாகும் தென் வெள்ளாற்றினைக் கடந்து, "நெடும் புறவிற் குறும்புதல்கள் காடு நாடு முகை முல்லைக் கடிநாறு நிலங் கடந்து, போர்நாடுஞ் சிலைமறவர் புன்புலவைப் பிடைபோகி, சீர் நாடும் தென்பாண்டி நன்னாடு சென்று, பிறங்கல் மருங்கு எறிந்து வரு நதிகள்பல சென்றணைந்து, கடந்து ஏறி, கான அதர் பல கடந்து, கொடுங்குன்றம் சென்று," தொடர்ந்து அழகர் மலையை மேற்புறமிட்டு மதுரைமா நகரை அடைந்ததாக இருந்திருக்கின்றது.

இவ்வழி சோழநாட்டிலிருந்து மதுரைக்குச் செல்லும் குறுக்கு வழியாக இருப்பினும் இடையிடையே ஆறலை கள்வரின் தொல்லையும், பாலைப் பகுதியின் துன்பமும் நிறைந்திருப்பதனால்; மக்கள் எளிதில் இவ்வழியினைக் கடத்தற்காகாது.

மற்றொரு நெடியசாலை, சோழநாட்டின் வடப்குதியினின்றும் காவிரியின் கரைவழியாக நேர் மேற்கு நோக்கிச் சென்று உறையூரில் எல்லையிட்டு அங்கிருந்தும் இரண்டாகப் பிரிந்திருக்கின்றது. அவற்றுள் ஒன்று தொடர்ந்து நேர்மேற்கிட்டு கொங்கு நாட்டின் இடையே கரூர் வழியாகச் சென்று குடமலையைக் கடந்து, மலைநாட்டின் தலைநகரங்களுள் ஒன்றான கொடுங்கோளூரை அடைந்து நின்றது.

மற்றொரு பிரிவுச்சாலை, உறையூருக்குத் தெற்கே, காடும் கரம்பும் தரிசுமாகப் படர்ந்து நின்ற அகலிடைத்திடையே அருகிச் சென்று கொடுங்கோளூர் நெடுங்குளக்கரையளவில் எல்லையிட்டு, அங்கிருந்தும் மூன்று வழியாக பிரிந்து மதுரையை அடைந்திருக்கின்றது. கொடுங்கோளூரினின்றும் மூன்றாகப் பிரிந்து செல்லும் நெறிகள் சற்றே தென்மேற்கில் இருக்கும் மதுரையை நோக்கிய குறியாகவே தொடர்ந்து இடையே கொடுங்குன்றம் என்னும் மலையை ஓரளவு நெருங்கக் கூடிய நிலையில் அங்கிருந்தும் மதுரைக்குச் செல்லும் பெருவழியிற் கூடியும், குறுக்கிட்டுப் பிரிந்தும் சென்று மதுரையை அடைந்துவிடுகின்றன. இவ்வாறு குறிப்பதற்குரிய பழைய சாலைகளின் அமைப்பெல்லாம் சிலப்பதிகாரத்திலும், பெரிய புராணத்திலும் குறிக்கப்பெற்றுள்ள வழிக்குறிப்பை அடிப்படையாகக் கொண்டதேயாகும்.

இன்றுள்ள கொடுங்கோளூர்ப் பகுதியினின்றும் மதுரைக்குச் செல்லும் கப்பிச்சாலைகள் இரண்டுடன், பிரான்மலை குறுக்குப்பாதை என்று அங்குள்ள மக்கள் சுட டிக்காட்டும் உறையூரிலிருந்து குறுக்குப்பாதையாகத் தொடரும் காட்டுப்பாதையும் ஓரளவு சிலப்பதிகார விளக்கத்திற்கு இலக்காக நிற்பினும் பழையநெறிகள் இவைதாம் என்று சுட்டிக்கூறவியலாதென்பது உண்மையேயாகும். ஆயினும், கொடும்பாளூரிலிருந்து தெற்கே மதுரை அளவிலும் பரந்து நிற்கும் காடு, நாடு, கரம்பு, பள்ளத்தாக்கு, மலைகள் ஆகிய நிலவியற்கைச் சூழலைக் கொண்டு, இளங்கோவடிகள் குறித்த நெறிகளைக் கற்பனைக் குறியாகவும் அளவிட்டுக் காண இயலாதென்று வரலாற்றாராய்ச்சியாளர் சொல்வதற்கில்லை. இவ்வாறு பண்டைக்காலத் தமிழகத்தில் புழக்கத்தில் இருநத பழையவழிகளுள் தலையான பெருவழிகளைப் பற்றிய செய்திகளைப்பற்றி ஓரளவு சுருக்கமாகக் கூறினோம் அவற்றுள் கண்ணகியும் கோவலனும் கவுந்தியடிகளுடன் மேற்கொண்ட காவிரிக்கரைவழியைப்பற்றி ஆராய்வோமானால், இக்கரை வழியே ஊரும் நாடும் இடையிட்டுச்செல்லும் மருதநிலப்பாங்கை காவிரிக் கரையளவிலும் பெற்று, மக்கட் புழக்கம் உடையதாய் இருந்திருக்கிறது. இக்காரணங்கொண்டே செல்வவளத்தில் வளர்ந்த பெருமகள் கண்ணகியுடன் தனித்துப்புறப்பட்ட கோவலன், இக்காவிரிக்

க்கரைவழி மதுரைக்குச் செல்லுதற்குச் சுற்று வழியாக இருப்பினும், துன்பம் இல்லாதநெறி என்பதை உணர்ந்தே வழிக்கொண்டான் என்பதை, சிலப்பதிகாரச் செய்தியைக் கொண்டு நாம் அறிந்து கொள்ளத்தக்கதாக அமைந்துளது. இக்காவிரிக்கரை வழியினை இன்றுள்ள இயற்கைச் சூழலுடன் காண்போம்.

பழைய காவிரி

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து காவிரியாற்றின் பழமையை இன்றுள்ள நிலவியற்கையுடன் வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டு ஆராய்வோமானால், ஆறு கடலில் புகும் புகார்ப்பகுதி காலப்போக்கில் இடம்மாறி இருக்கின்றதென்பதை நன்கு அறியலாகும். இத்தகைய மாறுபாட்டிற்குக் காரணம் ஆற்றின் கழிமுக வியற்கை நிலை ஒருபுறச்சானருக நிற்பினும் மாரிக்காலத்தில் உண்டாகும் வெள்ளப்பெருக்கே சிறப்புடையதாக அமைந்துளது. இங்கிருந்தும் காவிரியை மேல்நோக்கித் தொடருவோமானல், ஆற்றின் இயல்பு இன்றுள்ள போககில் இருந்திருக்கவியலாதென்பது நன்கு புலனுகின்றது. சிலப்பதிகாரத்தில் குறிக்கப்பட்ட காவிரியின் நிலை பின்னர் சிதைந்து சுவடுமாறியுள்ளதென்பதை நிலவியற்கையும் ஆற்றின் போக்கும் உணர்த்துகின்றன. இதற்குச் சான்ருக இப்பகுதியில் பூம்புகாரை அடுத்து மேற்புறத்திலுள்ள திருவெணகாடு என்னும் பழமையான ஊரிலுள்ள சிவன்கோயில் கல்வெட்டில், கி. பி. 13-ஆம் நூற்ருண்டில் விக்கிரமபாண்டியத் தேவரால் ஏற்படுத்தப்பெற்ற நிபந்தச்செய்திகளுள் " இன்னுயனுர் திருநாமத்துக்காணி திருச்சிற்றம்பலமுடையான் குறையில் காவேரி ஆறு உடைந்து மடுவாய் நீர்நிலை ஆன நிலம் " என்றும் அதே காலத்தில் தோன்றிய மற்ருெரு கல்வெட்டில், சோழமண்டலத்து ராசாதிராச வளநாட்டு இரண்டு காவேரி ஆற்றுக்கு நடுவுபட்ட ஊர்களில் நகரம் ஆளவந்த சோழபுரம் " என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

இச்செய்திகளைக்கொண்டும், காட்சிக்குரிய நிலவியற்கையினைக் கொணடும் ஆராய்வோமானுல், காவிரி உடைப்பெடுத்ததினுலோ, அன்றி வெள்ளப் பெருக்கால் அழிவு உண்டாகாமல் பண்டை அரசியல்கால் பிரித்துவிட்ட முயற்சியாலோ ஆறு இரண்டு பிரிவாகிச் சென்று கடலில் கலந்திருக்கின்றதென்பது விளங்குகின்றது. இந்நிலை, 13-ஆம் நூற்ருண்டிற்கு முன்னரே நிகழ்ந்திருக்கின்றதென்பதைத் தவிர இவ்வளவில் காலத்தை உறுதி செய்ததற்கில்லை.

மேலே காவிரியின் கரைவழியே தொடருகின்ருேம். இருகரையிலுள்ள பல சிற்றூர்களையும் சமய குரவரால் பாடப்பெற்ற தலங்களையும் கண்டுசெல்லுகின்ருேம். இடையே இன்று குற்ருலம் என்று அழைக்கப்படும் திருத்துருத்தி'யை அடைகின்ருேம். இப்பொழுது இவ்வூர் காவிரியின் தென்கரையில் இருக்கின்றது.

இங்குள்ள சொன்னவாறறிவார் திருக்கோயிலை, கி. பி. ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அப்பரடிகள், 'பொன்னியின் நடுவுதன்னுள் பூம்புனல் பொலிந்து தோன்றும் துருத்தி' தூமணற் றுருத்தி', 'துண்டத்துத் துருத்தி' என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்கள். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரரும் இத் தலத்தைக் 'காவிரித் துருத்தி', என்று கூறியிருப்பதுடன், துருத்திப் பெருமானையும் வேள்விக்குடியுளானையும் ஆற்றிடைக் குறையில் ஒருங்கே கண்டும் பாடியுள்ளார்கள். இருமருங்கும் ஆறு பிரிந்து செல்ல இடையே திட்டிட்டு நிற்கும் ஆற்றிடைக் குறையாகும் நிலத் துண்டத்தினையே துருத்தி என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு, ஆற்றின் நடுவே அமைந்த திட்டில் நின்ற திருத் துருத்தி என்ற குற்றாலம், இன்று காவிரியின் தென்கரையில் தனித்து நிற்கின்றது. தென்கரைத் தலமாக இவ்வூர் நின்றதை கி. பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நின்ற சோழவரசினைக் காத்த விக்ரமசோழன் கல்வெட்டுகள், " தென்கரை ராஜநாராயண வளநாட்டு வீங்கு நீர்துருத்தி " என்று கூறப்பட்டுள்ளது. இச் செய்தியால் திருத்துருத்தி தென்கரைத்தலமாகியதுடன் பழம்பெயரையும் மாறாமல் கொண்டிருந்ததென்பது போதரும். எனவே, 12-ஆண்டிற்கு முன்பே காவிரியின் போககு மாறியுள்ளமை தெளிவாம்.

இன்று, குற்றாலம் அமர்ந்தான் கோயிலுக்கு முன்னர் தனித்து நிற்கும படித்துறை மண்டபம் ஒருகாலத்தில் இப்பகுதியில் வடககிலிருந்து இழிந்து கிழக்கிட்டோடிய காவிரியின் கீழ்க்கரையில் இருந்ததாகக் கூறுகின்றார்கள். இச்செய்திக்கேற்ப மணடபத்திற்கு முன்னர் தொடரும் வெளியை அ*ழுங்கால் மணற்படிவங்களே காணப் படுகின்றன. எனவே, முன்னர் கவர்ந்து இழிந்தோடிக் கூடிய காவிரியின் உட்கிடைத்தரையில் இன்றைய குற்றாலம் திருததுருத்தி என்ற பெயருடன் திகழ்ந்த உண்மை ஓரளவு புலனாவதுடன், காவிரி தன்னிலையில் மாறியுள்ள நிலைமையும் தெளிவாகின்றது

அடுத்து, காவிரியின் கரைவழியிலுள்ள திருவிடைமருதூர் சிவன் கோயில் கல்வெட்டில், முதல் பராந்தகனாகிய மதிரைகொண்ட கோபரகேசரி வர்மனுடைய ஆட்சியில் (கி. பி. 9442-ல்) இக்கோயிலுக்கு நிபந்தம் செய்யப்பெற்ற நிலப்பகுதிக்கு எல்லை கூறுமிடத்தில், " மேல்பாற்கெல்லை பழங்காவேரிக்கும் கிழக்கும் வடபாற்கெல்லை பழங்காவேரிக்குத் தெற்கும் " என்று குறிக்கப்பெற்றுளது. இச் செய்தியால் காவிரியாறு பழங்காவேரியாறு என்று சுட்டும் நிலையை அடைந்துள்ளமை தெரியவருகின்றது. ஆறு பிரிந்து புதிதாக கால் கொண்டோடியதினாலேயே தலைமையான ஆற்றைப் பழைய காவிரி என்று சுட்டிக் கூறியிருக்கின்றார்கள். எனவே, புதிதாகப்பிரிந்தோடிய அல்லது பிரிக்கப்பட்ட காவிரிக்கால் புதிய காவிரி ஆகியது போலும் !

(தொடரும்)

# " வேள் எவ்வி " [நாடகம்]

சு. பாலசுந்தரம்

## காட்சி :— 1.

இடம் :- பள்ளிக்கூட வகுப்பறை.

மாந்தர் :- ஆசிரியர், மாணவர்கள்:

ஆசிரியர் :- மாணவர்களே ! இன்று நடைபெற வேண்டி......

மாணவர் 1 :- (குறுக்கிட்டு) பாடங்களை எல்லோரும் படித்துவந்துள்ளோம் ஐயா.

ஆசிரியர் :- இன்று நடைபெற வேண்டியது ?

மாணவர் 2 :- குறுந்தொகையில் 19-வது செய்யுள்.

ஆசிரியர் :- 19-வது செய்யுள் யார் பாடியது ? துறை என்ன ?

மாணவர் 1 :- பரணர் — உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் சொல்லியது.

ஆசிரியர் :- செய்யுளைக் கூறுக.

மாணவர் :- " எவ்வி யிழந்த வறுமையாழ்ப் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்
றினைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுறு மௌவ லூறும்
பல்லிருங் கூந்தல் யாரளோ நமக்கே." (குறுந் 19)

ஐயா ! எவ்வியினுடைய வரலாற்றை இன்று கூறுவதாக அறிவித்தீர்கள். அதனைச் சுருக்கமாகவேனும் உரைத்தருள வேண்டும்.

ஆசிரி :- பார்த்தீர்களா, வயது வந்த மாணவர்களானாலும் கதை கேட்பதில் உங்களுக்கு அவா இருக்கிறது. மக்களின் உள்ளப் பாங்கை அறிந்தே அறிஞர்கள் சுவையற்ற வரலாறுகளையும், அறச் செய்திகளையும் மெய்யும், பொய்யுமாகக் கதைப் போக்கிலே வைத்து உணர்த்தியுள்ளார்கள். தொகை நூல்களைப் பாடிய பெரும் புலவர்கள் பல தொடர்நிலைச் செய்யுள்களையும் சிறியதும் பெரியதுமான காப்பியங்களையும் இயற்றி இருந்திருப்பார்கள். நமது ஊழ்வினைப் பயத்தாலும், நமது மடிமையாலும், மடமையாலும், வேற்றவர் ஆட்சியாலும், போலி நாகரிகங்களாலும் அவை மறைந்தன. எடுத்துக் காட்டாக பரணர் முதலியோர் தொகை நூல்களில் எவ்வியைப் பற்றிக்குறிப்பிடுகிறார்கள்.

அச் செய்திகளோடு புறநானூற்றின் துணைகொண்டு எவ்வியைப் பற்றி அறியப்படும் வரலாற்றைக் கூறுகிறேன், கேளுங்கள்.

நம் தமிழகம் மூவேந்தர்களால் ஆளப்பட்டுவந்த காலத்திலேயே குறுநில மன்னர்களும் மலைநாட்டுத் தலைவர்களும் ஒவ்வொரு பகுதியில் வேந்தர்களுக்கடங்கியும், அடங்காமலும், நட்பாகவும், துணையாகவும், பகையாகவும் ஆண்டு வந்துள்ளார்கள். அவர்களுள் பாரி பிறந்த வேளிர் குலத்தில் அவனுக்கு முன்னே தோன்றி அளியினாலும், வீரத்தாலும், பண்பாலும், படையாலும் சிறந்து விளங்கியவன் வேள் எவ்வி. இவன் ஆண்ட பகுதி மிழலைக் கூற்றம். தலைநகர் நீடூர், கடற்கரைப்பட்டினம் நீழல்.

மாணவர் 1 :- ஐயா! நீடூர் நீழல் என்ற ஊர்கள் இப்பொழுது எங்கிருக்கின்றன?

ஆசிரியர் :- இப்பொழுதுள்ள தஞ்சை மாவட்டத்தின் தென்பகுதியும் இராமநாதபுர மாவட்டக் கிழக்குப் பகுதியுமாகலாம். எவ்வி இசைக் கலையை மிகுதியாக வளர்த்தவன். பாணர்கள் இவன் மாட்டுப் பேரன்பு பூண்டு ஒழுகினார்கள்.

அப்பொழுது, பாண்டிய நாட்டில் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் ஆண்டு வந்தான். அவனுக்கு இவன் கப்பங்கட்டாமல் தனியரசோச்சி வந்தான். அக்காலத்தில் குறுநில மன்னர்களும், மலைநாட்டுத் தலைவர்களும் வேந்தர்களுக்குப் படைத்துணை போவதுண்டு. இந் நெடுஞ்செழியன் சேரன் யானைக்கண்சேய்மாந்தரஞ் சேரல் இரும்பொறையோடு போர் உடற்றிய காலத்தில் புதுக்கோட்டை மலையில் வாழ்ந்த மகிழ்நன் இப் பாண்டியனுக்குத் துணை நின்றான். இம் மகிழ்நனும் இவனைச் சேர்ந்த வேடர்களும் பசும்பூணர் என்று அழைக்கப்பட்டனர்.

மாணவர் 2 :- ஐயா ! பசும்பூணர் என்றால் என்ன பொருள் ?

ஆசிரியர் :- வெள்ளியினால் அணிகலன் பூண்டிருந்ததனால் இவர்கள் பசும்பூணர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் எவ்விக்கு அடங்கி வாழ்ந்து வந்தார்கள். மகிழ்நன் பாண்டியனுக்குத் துணை புரிந்து அவன் நட்புப்பெற்ற செருக்கினாலே எவ்வியை மதியாது ஒழுகியதோடு நீடூர் மக்களுக்குத் துன்பமும் இழைத்து வந்தான். எவ்வி பலமுறை சொல்லியும் கேளாததனால் அவர்களை அடக்கத் தன் படைத் தலைவன் மூலம் ஒரு பெரும் படையை அனுப்பினான். அப்படை அப்பசும்பூண் பொருந் திலரை அரிமணம் என்ற ஊரில் சிதற அடித்து உறத்தூர் என்னும் இடத்தில் பெருஞ்சோற்று விழா ஒன்று நிகழ்த்தியது.

அக் குறும்பர்களும், அவர்களுடைய தலைவனாகிய மகிழ்நனும் நரந்த மலைப்பகுதியில் சென்று மறைந்தனர். பின்னர், எவ்வி இவ் வெற்றியை நீடூரில் தன் அரண்மனையில் கொண்டாடினான். அப்பொழுது ஊரெல்லாம் அழகு செய்யப்பட்டன. எவ்வியினுடைய நாளோலக்கத்தில் அமைச்சரும் படைத் தலைவரும் பாவலரும் பாணர்களும் சூழ்ந்திருக்கின்றனர்......

---

## காட்சி :— 2.

இடம் :- எவ்வியின் அரசவை.

மாந்தர் :- வேள் எவ்வி, அமைச்சர், புலவர், பாவலர், பாணர், விறலி படைத்தலைவன் வேங்கை வீரன், காவலர்கள்.

காவலன் :- இருநிலம் போற்றும் பெரும்புகழ் மன்னர், மிழலைக் கூற்றத்து மேதகு காவலர் வேள்எவ்வி வருகிறார்! வருகிறார்!!

எல்லோரும் :- (எழுந்து) வாழ்க!

காவலன் :- மறக்குடி வேளிர் மாபெரு மன்னர்......

எல்லோரும் :- வாழ்க!

காவலன் :- கன்னித் தமிழொடு கலைகளின் காவலர்......

எல்லோரும் :- வாழ்க!

[எவ்வி இருக்கையில் அமருகின்றான். பிறகு எல்லோரும் தம் தம் இருக்கைகளில் அமருகிறார்கள்.

எவ்வி :- செந்தமிழ்ப் புலவர்காள்! செருமகிழ் வீரர்காள்! சிந்தை நெறி கொளச்செய்யும் அமைச்சர்காள! அவையோர்காள்! அனைவருக்கும் வணக்கம்.

[படைத் தலைவன் வேங்கை வீரனைப் பார்த்து]

......படைத் தலைவரே! வீரர்கள் யாவரும் ஊர் திரும்பினரோ?

வே. வீரன் :- உயர் தமிழ்க் காவல! உறத்தூரின்கண் உண்டாட்டு மகிழ்ந்த வீரர்கள் யாவரும் கொண்டாட்டு மகிழக்கூடியுள்ளனர்.

எவ்வி :- அல்லல் களைந்த நம் அரும்பெரும் வீரர்களுக்கு நல்ல பல பரிசில்கள் நல்குக.

அமைச்சர் :- பொல்லாங்கிழைத்த பொருந்திலர் ஒழிந்ததால் எல்லா மக்களும் இன்புடன் உள்ளனர்.

வே. வீரன் :- நீடூர் மறவர் பாடுபெற்று ஓங்கினர். கவலையும் அச்சமும் திவலையுமிலலை. ஒருசில கோழைகள் புறங்கொடுத்தோடினர். "மகிழ்நன்" புலிகண்ட புல்வாயைப் போல் புதர்களை அடைக்கலம்புகுந்தான்.

அமைச்சர் :- அறிவிலி...... நம் மரசர் அடிமலர் ஆயுளைத் தருமென் பதை மறந்தான். புறங்கொடுத்தோர்க்குப் புன்மை செய்வது மறம் புரி வீரர்க்கு அறமில்லை. ஆயினும், பின்னால்............ இடுக்கண்.

வே. வீரன் :- விளைத்திட நினைத்தால் தொலைப்பது உறுதி. தீங்கு புரிந்தால் வாங்குவேன் உயிரை. ஒளிந்து மறைந்தான். இன்றேல், விளிந்து வானவர் விருந்தாய் இருப்பான்.

எவ்வி :- அரசியற் பகையும் ஒருசில வேண்டும். இன்றேல், ஆண்மையும் வீரமும் அழகு செய்யுமோ ? விழிப்பும் உழைப்பும் வீரமும் விளைய பழிப்பில் பகையே உரமெனப் பகர்வார்.

அமைச்சர் :- ஆம் ! இயல்பாக வரும்பகை, இயற்றிக்கொள்ளும் பகை எனப் பகை இரண்டு. அவற்றுள் முன்னதை நீக்குதல் மன்னவர் கடன், பின்னதை இயற்றுதல் பேதமை.

[காவலன் ஒருவன் வருதல்]

காவலன் :- [வணங்கி] மண்டலம் நிழற்றும் மணிக்குடை மன்னவ ! வணக்கம். தண்டமிழ்ப் புலவரும, பண்ணிசைப் பாணரும், நாட்டியக் கலைஞரும், நாவலர் சிலரும், நும் அரசியற் புகழ்ந்து பரிசில்கள் பெறவும், பொன்னரி மாலையொடு பொற்பூச் சூடவும், பொன்னகர் வாயிலில் போந்து நிற்கின்றனர். மன்னவ ! மனக்கருத்து அருளுதல் வேண்டும்.

எவ்வி :- சென்று அவர் தம்மை மன்றத்து அமைத்து வா!

[காவலன் வணங்கிச் செல்லுகிறான். புலவர், விறலி, பாவலர் முதலியோர் தனித் தனியாக வருகின்றனர்]

புலவர் :- வாழிய மன்னவ ! வளர்க நின் கொற்றம்.

எவ்வி :- வண்டமிழ்க் கவிஞ ! வருக.

புலவர் :- கொற்றவ ! நின் பெரும் வெற்றியால் என்றன் அகம் நிறை மகிழ்ச்சியைப் புகல விருப்புடையேன்.

எவ்வி :- தகவுடைப் புலவோய் ! சாற்றுக. பூந்தமிழ்ச் சுவையுண்ணப் புகலவும் வேண்டுமோ ?

புலவர் :- [பாடல்]

இசைகமழ் குடியில் நசைபெறத் தோன்றித்
திசைஎலாம் புகழத் தீந்தமிழ் வளர்க்கும்
அசைவிலாப் பெரியோய் அருந்திறல் மன்னவ !
யாழிசைப் பாணரின் ஏழிசைப் பொருளே !
முத்தமிழ் வித்தாய் மூண்டநற் றிறலோய் !
வாழிநின் நாடு ! வாழ்கநின் நல்லறம் !

வாழியநின்குடி வளர்க செங்கோல் என
வாழ்த் துதும் வாழிய ! எவ்வி
வழிவழி வண்மை வளர்ந்தொளி சிறந்தே !

எவ்வி :- செந்தமிழ்ப் பாவல ! சிந்தை களிப்புறத் — தந்த இப் பரிசிலைப் பெற்றுளம் மகிழ்க. [ஒரு தட்டில் பொன்னும் மணியும் அளித்தல்]

பாணர் :- ஏழிசை போற்றும் மன்னவ ! வாழி ! ஏழையேன் வணக்கம்.

எவ்வி :- யாழிசைப் பாணரே ! வருக. மகிழ்ச்சி.

பாணர் :- மன்ன ! நின் புகழைப் பண்ணொடு பிணித்து மண்ணகம் விளக்க எண்ணி இங்குற்றேன்

எவ்வி :- இன்னிசை மழையில் என்னுளந் திளைக்கப் பண்ணவும் வேண்டுமோ ? பாடுக பாணரே ! பாடுக பைந்தமிழ்.

விறலி :- நெடுநிலம் புகழும் வடிவேல் அரசே ! அடியேன் வணக்கம். கடிநடம் புரியும் கருத்தினேன்.

எவ்வி :- துடியிடைத் தோகையே ! நீடவை மகிழ ஆடுக, ஆடுக !

பாணர் :—

வெல்லுந் தமிழணிலே எவ்வி ! உன்
வீரந்தழைக் குதையா !
சொல்லும் பொருளிலெலாம்—மன்ன நின்
தோற்றம் ஒளிருதையா —(வெல்லும்)

பாணர் மகிழ்ந்தனரே—எவ்வியுன்
பண்பினைக் கண்டதுமே—பசும
பூணர் ஒழிந்ததனால் அமைதியிப்
பூவில் நிலைத்ததம்மா —(வெல்லும்)

[பாணன் பண் இசைக்கின்றான். விறலி ஆடுகின்றாள்.
எல்லோரும் மகிழ்ந்து ஆர்வாரிக்கின்றனர்]

எவ்வி :- பாணரே ! வருக. நும் கற்பனைத் திறனில் களிப்பு மிக்கடைந்தேன். பொற்பூச் சூடுக. பொலிக நின் கலைவளம்.

[பொற்பூச்சூட அளிக்கின்றான் எவ்வி பின்னர் விறலியை நோக்கி...]

......விறலியே ! வருக. வியப்பினும் வியப்பு நின் நயத்தகு நடனம் பொன்னரி மாலையைப் பூணுக மகிழ்ந்து. நின் நுண்கலை வாழ்க. [பொன்னரி மாலை தருகிறான்.]

எல்லோரும் :— வாழ்க முத்தமிழ் ! வளர்க நம் கலைகள் ! வாழ்க நம் மன்னர் !

## காட்சி :— 3.

இடம் :- சோலை. மாந்தர் :- வீரர் இருவர்.

வீரன் 1 :– நண்பா ! இந் நிலவைப் பார். நம் புகழைப்போல் நாள் தோறும் வளர்கிறது.

வீரன் 2 :- இதன் வளர்ச்சி நிலையானதா ? உவாவிற்குப் பின் உருக் குறையும் ; ஒளி தேயும்.

வீரன் 1 :– ஆம்! நிலவு எப்பொழுதும் முழுமையாக இருந்தால்.... ......எவ்வளவு அழகாக இருக்கும ........மக்களைப் போலவே இயற்கையும் அறிவுக் குறைபாடுடையதோ ?

வீரன் 2 :- இல்லை. நண்பா! நிலைமையை நமக்கு உணர்த்துவதற்காக இயற்கை எழுதியுள்ள நூலுள், இந் நிலவு ஒரு விரிந்த ஏடு.

வீரன் 1 :– இன்பமான இந்த வேளையில் நிலையாமையைப் பற்றிய ஆராய்ச்சி ஏன் ?

வீரன் 2 :- வாழ்வில் சில உண்மைகள் கசப்பாகத்தானிருக்கின்றன.

வீரன் 1 :– உயிர்கள் வாழும்பொருட்டுத்தானே இயற்கை இவ்வளவு பொருள்களை உண்டாக்கியிருக்கிறது.

வீரன் 2 :- ஆம் ! ஆனால், யார் வாழ்கிறார்கள் ? வாழ்வை அழித்துக் கொள்கிறார்கள். அரிமணத்தில் நிகழ்ந்த போரில்......

வீரன் 1 :- நல்லவேளை போர் என்றவுடனே நினைவு வந்தது. நண்பா ! வேங்கை வீரர் இளைஞராயினும் வினைத்திட்பம் உடையவர்.

வீரன் 2 :- வியப்பு என்ன அதிலே அரிமா குருளையாகயிருந்தாலும் யானைக்கு அஞ்சுவதில்லையே ! தமிழ்க்குடிக்கு வீரம் தாய் உரிமை யல்லவோ ?

வீரன் 1 :- ஆமாம். உனக்கு இந்தப்போரில் என்ன பரிசுகிடைத்தது?

வீரன் 2 :- இதோ ! [தன் முகத்திலும் மார்பிலும்பட்ட புண்களைக் காட்டுகின்றான்]

வீரன் 1 .- இதனைக் கேட்கவில்லை. மன்னன் அளித்த பரிசு ?

வீரன் 2 :- இதோ ! [எனத் தன் இடையிலிருந்து ஒரு குத்துவாளை எடுத்துக் காட்டி......இதைப்போன்று என் பாட்டனார் ஒரு முறை பெற்றிருக்கிறார்.]

வீரன் 1:- இது என்ன போர்...... நண்பா! மூவேந்தர் படையோடு மோதவேண்டும். காட்டலாம் நம் திறமையை. இனி எப்பொழுது வாய்க்குமோ போர்? அதுவரை ஏரைக்கொண்டு மண்ணோடு தான் போர் புரிய வேண்டும்.

வீரன் 2:- வீரன் என்றால்...... போர்தான் வேலையா? அறத்தையும், நேர்மையையும், நிலைநாட்டுவதற்காக இன்றியமையாத இடங்களில் நிகழ்த்தப்படுவது போர். மற்றவை உடற் செருக்கினால் விளைவிக்கும் கேடுஎன என் தந்தையார் அடிக்கடி கூறுவார்.

வீரன் 1:- நண்பா! உன் குருதியில் உன் பாட்டனார் வீரமும், தந்தையின் புலமையும் கலந்தோடுகின்றன.

வீரன் 2:- ஆம். அறிவோடு கூடிய வீரந்தான் உலகிற்கு ஆக்கத்தைத்தரும். அவை பிரிந்து தனித்தனி ஓங்குமானால் வஞ்சமும் பகையும் பஞ்சமும் கொலையும் விளையும்.

வீரன் 1:- நீ கூறுவது விளங்க வில்லையே.

வீரன் 2:- மற்றொரு சமையம் விளக்குகிறேன்! வா, போவோம்.

[இருவரும் போக முனைகின்றனர். அதுபோது ஒருவன் — அவன் கோழை — அஞ்சி ஓடி வருகின்றான் எதிரே]

கோழை:- ஐயோ! ஐயோ! இங்கே யாரும் ஆண் பிள்ளைகள் இல்லையா? ஓடி வாருங்கள்!...... ஓடி வாருங்கள்!! பசும் பூனை! பசும் பூனை! [என அலறுகின்றான்]

வீரன் 1:- பூனையா? யாரப்பா நீ? ஆண் பிள்ளையைத் தேடுகிறாய்

கோழை:- ஆமாஐயா......ஆமாம்.

வீரன் 2:- நீ ஆண் பிள்ளை இல்லையா?

கோழை:- ஓ! நல்லவேளை நினைவுபடுத்தினீர்கள். நானும்—என்ன செய்வது? என்னிடத்தில் வாள் இல்லையே!

[கோழையின் இடையிலே தொங்கும் வாளை வீரன்! காட்டியபடி......]

வீரன்:- இது என்ன?

கோழை:- இது பெண் வாள். பயன்படாது

வீரன் 1:- பெண் வாளா? உன் வாள் எங்கே? இதை ஏன் வைத்துள்ளாய்?

கோழை:- ஆம். இது அழகுக்காக. என் ஒரு வாளையும் என் மனைவி அரிவாள்மணையாக்கி விட்டாள்!

வீரன் 2 :- நீ போருக்குச் சென்றிருக்கிருயா ?

கோழை :- இப்பொழுது அங்கிருந்துதானே வருகிறேன்.

வீரன் 1 :- எந்தப் போர் ? எங்கே போர் ?

கோழை :- வைக்கோல் போர், நேற்றுக் கடா விட்ட நெல்லைக் களத்திலே வைத்திருந்தேன் ......

[வீரர் இருவரும் சிரிக்கின்றனர்]

வீரன் 1 :- உனக்குச் சண்டை செய்யத் தெரியுமா ?

கோழை :- அதென்ன அப்படிக் கேட்கிருய் ? உனக்கு இன்னும் மணமாக வில்லையா ? நான் தவறினுலும் என் மனைவி சண்டையிடத் தவறியதில்லையே !

[மீண்டும் வீரர் சிரிக்கின்றனர்]

வீரன் 2 :- வா, போகலாம். [வீரர் போக முனைகின்றனர்]

கோழை :- ஐயையோ ! என்னைத் தனியே விட்டுப் போகிறீர்களே !

வீரன் :- இந்தா, இந்த வாளைத் துணைக்கு வைத்துக்கொள். போ!

[கோழை வாளைச் சுழற்றுகிருன். அதுபோது மரம் அசைகிறது. வாளைத் தோளிலே போட்டுக்கொண்டு......]

கோழை :- ஐயையோ, பேய் ! பேய் ! காப்பாற்றுங்கள்.

[கோழை அலறுகின்ருன். போன வீரர் இருவரும் ஓடி வருகின்றனர்]

வீரன் 2 :- நண்பா ! வீரனுக்கும் வாளுக்குந்தான் உறவு. மற்றவருக்கு அது கூற்று. பார்த்தாயா ?

வீரன் 1 :- [கோழையைப் பார்த்து] அப்பா ! பெரு வீரா ! உன் வீட்டில் கொண்டு விடுகிறேன், வா.

வீரன் : வேண்டாம். அச்சம் உடையவர்களை நம்மால் காக்க முடியாது. அவர்கள் அச்சம் நீங்க வேண்டும். அல்லது அதற்கு ஆளாகி அழிய வேண்டும். இவன் தனிமையே இவனுக்கு நெஞ்சுர மளிக்கும். வா போகலாம்.

[வீரர் போகின்றனர்]

கோழை :- ஐயா...... ஐயா...... போங்களேன். எனக்கு வர முடியாதோ ? .........நானும் ஆண் பிள்ளைதான்,

---

(தொடரும்)